# வானவில்

# VAANAVIL

இதழ் - 94 | ISSUE – 94

ஐப்பசி 2018 | OCTOBER 2018


# நாட்டு மக்களே, ஆட்சி மாற்றத்துக்குத் தயாராவீர்!




நமது தாய்நாட்டில் மீண்டும் ஓர் ஆட்சி மாற்றத்துக்கான சூழல் உருவாகி வருகிறது. இது திடீரென ஏற்பட்ட ஒரு நிலைமை அல்ல. 2015 ஜனவரி 8 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிப் பிரிவும் சேர்ந்து 'நல்லாட்சி' என்ற பெயரில் உருவாக்கிய அரசின் தொடர்ச்சியான தோல்வியின் உச்ச கட்டமாகவே தற்போதைய ஆட்சி மாற்றத்துக்கான சூழல் உருவாகியுள்ளது.

இந்தச் சூழலைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, 2015 ஜனவரி 8 ஆட்சி மாற்றத்துக்கான சூழல் நாட்டின் இயல்பான மாற்றம் காரணமாக ஏற்பட்ட ஒன்றல்ல. அது, இலங்கையில் தமக்குச் சார்பான ஆட்சி ஒன்று அமைய வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளினால் தமது உள்நாட்டு ஆதரவுச் சக்திகள் மூலம் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

முன்னைய ராஜபக்ச தலைமையிலான ஆட்சி ஒரு எதேச்சாதிகார ஆட்சியாக செயற்பட்டதினால்தான் அந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என அந்நிய ஏகாதிபத்திய சக்திகளினதும், அவர்களது உள்நாட்டு அடிவருடிகளினதும் பிரச்சார ஊடகங்கள் திரும்பத் திரும்பப் பொய்ப் பிரச்சாரங்கள் செய்தபோதிலும், உண்மை அதுவல்ல.

பொதுவாகவே, இலங்கையில் இடதுசாரி சக்திகளின் ஆதரவுடன் ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகள் எல்லாமே பல குறைபாடுகள் இருப்பினும் ஏகாதிபத்திய விரோத அரசுகளாகவே இருந்து வந்துள்ளன. அந்த வகையிலான ஒரு அரசே இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசும் ஆகும். அவருடைய அரசிலும் இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பன பங்காளிகளாக இருந்தன. இந்த விடயம் ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஒரு கசப்பான விடயம். ஏனெனில் இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டரசில் இருந்த காலங்களிலேயே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கங்கள் அதிகளவான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுத்திருந்தன.

1970இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறீ.ல.சு.கட்சி இருந்த வேளையில் கம்யூனிஸ்ட் - சமசமாஜக் கட்சிகளுடன் சேர்ந்து பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபொழுது ஏகாதிபத்திய சக்திகளுக்கு அது பெரும் அடியாக விழுந்தது. ஏனெனில் அந்த அரசாங்கம் பல முக்கியமான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்திருந்தது. அதனால் ஏகாதிபத்திய சக்திகள் அந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு இடதுசாரிப் போர்வையில் இருந்த ஜே.வி.பி மூலம் 1971இல் எதிர்ப்புரட்சி ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்தி அதில் தோல்வி கண்டன.

1972இல் சிறீமாவோ தலைமையிலான அரசு இன்னொரு முக்கியமான ஏகாதிபத்திய விரோத நடவடிக்கையாக, இலங்கைக்கு பிரித்தானிய முடியரசுடன் இருந்த தொடர்பைத் துண்டித்து இலங்கையைக் குடியரசாக்கியது. புதிய குடியரசு யாப்பில் சிறீமாவோ அரசு தமிழ் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என்பதைச் சாக்காக வைத்து, ஏகாதிபத்திய சக்திகள் தமிழ் இனவாதத் தலைமையை பிரிவினைவாதப் பாதையில் தூண்டிவிட்டன. அது 30 வருடப் போராக வளர்ந்து நாட்டை சகல வழிகளிலும் சீரழித்தது நம் எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இந்த விடயத்தில்தான் ஏகாதிபத்திய சக்திகளுக்கு மகிந்த அரசு மீது கடுமையான கோபம் ஏற்பட்டது. ஏனெனில், ஏகாதிபத்திய சக்திகளின் மிகுந்த பண – ஆயுத பலத்துடன் தமிழ் சமூகத்தில் இருந்த ஜனநாயக, முற்போக்கு மற்றும்


**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**


**நூறு சிந்தனை மலரட்டும்**

# சிந்தனையில் குணாம்சரீதியான மாற்றம் அவசியம்

எப்போதும் போலவே சிக்கல்கள் நிறைந்த பூதாகரமான பிரச்சனைகளின் மத்தியிலேயே இலங்கை மக்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு தற்போதைய சர்வதேச அரசியல், சமூக நிலவரங்களும் ஒருபுறம் காரணமாக இருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இன்று இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பிரதானமான பிரச்சனைகளுக்கு உள்நாட்டு அரசியலில் நிலவும் ஸ்திரமற்ற தன்மைகளே பிரதான பங்கை வகிக்கின்றன. தென்னிலங்கை வாழ் பெரும்பான்மையின சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவில்லாமல் கொழும்பு மத்தியில் ஓர் ஆட்சியதிகாரம் உள்ளது. வடக்கில் தமிழ் தேசியவாத 'நோய்' முற்றிப்போய் அதிகாரப்போட்டி நடக்கின்றது. வடக்கினதும் தென்னிலங்கையினதும் நிலைமைகளை ஒப்பிடுகையில், மூவினங்களும் ஏறத்தாள சமமாக வாழும் கிழக்கு மாகாண அரசியலில் குறிப்பிடத்தக்களவு 'அடிதடிகள்' இல்லாமல், முற்றிலும் வித்தியாசமான தோற்றப்பாட்டைக் கொண்டுள்ளது.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான பதட்ட நிலைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டால், இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலம் கிட்டலாமென எல்லாராலும் பேசப்பட்டது. அதாவது யுத்தத்திற்காக செலவழிக்கப்படும் பணத்தை நாட்டின் மொத்த அபிவிருத்திக்காகச் செலவழித்தால் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 9 வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும், அரசியல்வாதிகளின் சிந்தனையிலோ, மக்களின் வாழ்க்கைத்தரத்திலோ பெரியளவில் மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையைப் போலவே முதலாளித்துவ ஜனநாயகம் நிலவும் பல நாடுகளில் கட்சிகளுக்குள்ளும், கட்சிகளுக்கிடையிலும் அரசியல் பிரிவினைகளும், ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்கு பாராளுமன்றக்கட்சிகளிடையே கடுமையான போட்டிகளும் உள்ளன. அதாவது ஆளுங்கட்சிகளுக்குள்ளயே கருத்து வேறுபாடுகள், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சியை வீழ்த்தி அதிகாரத்திற்கு வர முயலும் எதிர்க்கட்சிகள், எதிர்க்கட்சிகளை அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்க முயலும் ஆளுங்கட்சிகள் என்ற பொதுவான அரசியல் சூழல் பல நாடுகளில் உள்ளன. இதற்கு முன்னேறிய முதலாளித்துவமைப்பைக் கொண்ட அமெரிக்கா, பிரித்தானியா, தென் கொரியா, யப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளும் விதிவிலக்கல்ல.

இலங்கையின் ஆளுங்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் மற்றும் இந்த இரண்டு ஆளுங்கட்சிகளுக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கும் இடையேயான முரண்பாடுகளை ஒத்ததாகவே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் அவரின் கட்சியின் ஒரு பகுதியினருக்கும் மற்றும் குடியரசுக்கட்சிக்கும் ஜனநாயகக் கட்சிக்கும் இடையேயான முரண்பாடுகள் உள்ளன. எனினும் காலத்திற்குக்காலம் இந்த உள்–வெளி முரண்பாடுகளைச் சரிப்படுத்தியே உலகின் முன்னணி ஏகாதிபத்திய நாடாக அமெரிக்காவால் தொடர்ந்தும் மிளிர முடிகின்றது. ஆனால் இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ளவர்களோ, தொடர்ந்து அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உள்–வெளி முரண்பாடுகளுக்குத் தீர்வுகள் எதுவும் காணாது, நாட்டின் அபிவிருத்திப்பாதையை சீர்குலைத்த வண்ணமுள்ளார்கள்.

இலங்கையில் அண்மைக்காலமாக எரிபொருள் உட்பட பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்ட வண்ணமுள்ளன. இலங்கை நாணயத்தின் பெறுமதி உலகச் சந்தையில் வெகுவாக வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனுக்காக இலங்கை, சீன அபிவிருத்தி வங்கியிடம் 1 பில்லியன் டொலர்களை கடனாகப் பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்கடனில் 4.3 பில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

வடமாகாண அபிவிருத்திக்காக வடமாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படாமல் மத்திய அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக பல தடவைகள் பத்திரிகைகள் செய்திகளாக வெளியிட்டுள்ளன. ஆனால் வடமாகாண சபையோ அச்செய்தியினை மறுத்து, மத்திய அரசினால் வழங்கப்படும் முழு நிதியினையும் பயன்படுத்தும் அதிகாரம் தமக்கு வழங்கப்படவில்லையெனவும், மூன்றிலொரு பங்கு நிதியினைக் கையாளும் அதிகாரமே தம்மிடம் உள்ளதாகக் கூறுகின்றது. இவ்வாறு வடமாகாண சபை தெரிவிப்பது உண்மையானால், மத்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதியில், மாகாணசபையின் அதிகாரத்திற்கு உட்படாத பங்கு, வடமாகாண அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுவதை தமிழ் பாராளுமன்றவாதிகளே உறுதி செய்ய வேண்டும்.

யாழ் குடாநாட்டினை அடித்தளமாகக் கொண்ட தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழரசுக்கட்சியிலிருந்து, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரை எமது தமிழ்மொழி, தாய்நிலம், மக்கள் என்றெல்லாம் மேடைகளில் கோசம் போடுவார்கள். ஆனால் தமது தாய்நிலத்தினை ஏதாவதொரு வழியில் பொருளாதார அபிவிருத்தி செய்து, தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவோமென்றோ அல்லது தமிழ் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கியும் சாதிகளையும் ஒழிப்போமென்றோ அல்லது சுற்றஞ்சூழலை பாதுகாப்போமென்றோ இந்தக்கட்சிகள் ஒருபோதும் கூறியதுமில்லை, அதற்கான செயற்திட்டங்களை முன்வைத்ததுமில்லை. மாறாக, இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கே முன்னுரிமை, மக்களின் அத்தியாவசிய, சமூகப் பிரச்சனைகளை பின்னர் பார்த்துக் கொள்ளலாமென்ற பாணியிலேயே சகல தமிழ் குறுந்தேசியவாத அணியினரும் செயற்பட்டு வருகின்றனர். நாட்டின் இனப்பிரச்சனையோடு, மக்கள் இன்று எதிர்நோக்கும் சகல பிரச்சனைகளையும் இணைத்து, அவையனைத்தையும் படிப்படியாக தீர்க்கக்கூடிய சிந்தனையே இன்று இலங்கை முழுவதற்கும் தேவை.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# மகாவலி கங்கையும் வடக்கு மக்களும்



மகாவலி கங்கையை வடக்கே (முல்லைத்தீவு மாவட்டத்துக்கு) கொண்டு வரும் அரசாங்கத்தின் முயற்சிக்கு அங்கு வாழும் தமிழ் மக்களிடமிருந்து (அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடமிருந்து) கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்த எதிர்ப்பு நியாயமானதா இல்லையா என்பதை ஆராய்வதற்கு முன்னர், மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் முயற்சியின் வரலாற்றைச் சுருக்கமாகத் தன்னும் பார்த்துவிடுவது பயனுள்ளதாக இருக்கும்.

மகாவலியை வடக்கே திருப்பும் முயற்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதற்கு சுமார் 65 வருட வரலாறு உண்டு. இந்த முயற்சியை ஆரம்பித்த பெருமை சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தின் சாவகச்சேரி தொகுதியின் (அப்பொழுது தற்போதைய கிளிநொச்சி தொகுதியும் சாவகச்சேரிக்கு உள்ளேயே உள்ளடங்கியிருந்தது) உறுப்பினராக இருந்த வி.குமாரசாமி அவர்களையே சாரும்.

தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பாக அவர் 1947இலும், பின்னர் 1952இலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். அப்போது பதவியில் இருந்த ஐ.தே.க. அரசுகளுடன் தமிழ் காங்கிரஸ் இணைந்திருந்ததால், குமாரசாமி அந்த அரசுகளில் பிரதி அமைச்சராகவும், பாராளுமன்றச் செயலாளராகவும் பதவி வகித்தார்.

அரசாங்கப் பதவியை வகித்ததால், அந்தப் பதவியைப் பயன்படுத்தி வடக்கின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மகாவலி கங்கையை வடக்கே திருப்ப வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்து அதில் வெற்றியும் பெற்றார்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும். தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களும் அதே ஐ.தே.க. அரசில் கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகித்திருக்கிறார். அவர் அப்பதவியை வகித்த காலத்தில்தான் அவரது முயற்சியால் தமிழ் பிரதேசங்களான காங்கேசன்துறை, பரந்தன், வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் முறையே சீமெந்து தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை, காகித ஆலை என்பன தொடங்கப்பட்டதாக கூறப்படுவதுண்டு. அதில் பெரும்பாலும் உண்மை இருக்கலாம். அதேபோல அந்தக் கட்சியைச் சேர்ந்த குமாரசாமி மாவலியை வடக்கே திருப்பும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கலாம்.

இந்த தமிழ் காங்கிரஸ்காரர்களுடன் ஒப்பிடுகையில் தமிழரசுக் கட்சியினர் தமிழ் பிரதேசங்களுக்கு என்ன அபிவிருத்திகளைச் செய்தார்கள் என்று கேட்டால், சொல்வதற்கு எதுவுமேயில்லை. பொன்னம்பலம், குமாரசாமி ஆகியோருக்குப் பின்னர் தமிழ் பிரதேசங்களில் ஏதாவது அபிவிருத்தி முயற்சிகளைச் செய்தவர்கள் யார் என்ற பட்டியலைப் பார்த்தால் அதில் தமிழரசுக் கட்சியினரால் “துரோகிகள்” என வர்ணிக்கப்பட்ட அல்பிரட் துரையப்பா, தியாகராசா, அருளம்பலம், இராசதுரை, கனகரத்தினம், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களையே காண முடியும். (தமிழரசுக் கட்சியினரின் துரோக முத்திரை குத்தும் படலம் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தில் தான் ஆரம்பமானது)

**சுப்பராயன்**

இன்று ஐ.தே.க. அரசாங்கத்துடன் வர்க்க பாசம் காரணமாக ஒத்துழைக்கும் சம்பந்தனின் முன்னோடித் தலைவர்கள் முன்னரே இவ்வாறான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்திருந்தால் தமிழ் பிரதேசங்களின் வரலாறு வேறு விதமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் இவர்களது வழக்கம் ஐ.தே.க. அரசுகள் பதவியில் இருக்கும் காலங்களில் தமிழர் உரிமைப் போராட்டத்தை மூட்டை கட்டி வைப்பதும், சிறீ.ல.சு.கட்சி அரசுகள் பதவிக்கு வரும் காலகட்டங்களில் தமிழர் உரிமைப் போராட்டம் நடத்துவதாகத்தான் இருந்து வருகிறது. சரி, இது ஒருபுறமிருக்க,

குமாரசாமியின் வேண்டுகோளை ஏற்ற அரசாங்கம் நடைமுறையிலும் அதற்கான சில வேலைகளில் ஈடுபட்டது. மகாவலி கங்கையை முதலில் கிளிநொச்சியிலுள்ள இரணைமடு குளத்திற்கு கொண்டு வந்து பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கொண்டு செல்வதுதான் திட்டமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு நீண்ட கடலேரிகள் இருக்கின்றன. ஒன்று யாழ்ப்பாணக் கடலேரி. அது யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து ஆனையிறவில் ஏ9 வீதியின் மேற்குப்புறத்தில் வந்து முடிவடைகிறது. மற்றது தொண்டமானாறு கடலேரி. இது தொண்டமானாறில் ஆரம்பித்து ஆனையிறவுக்கு வடக்காக மண்டலாய் பகுதியில் வந்து முடிவடைகிறது.

மகாவலி கங்கையை யாழ்.குடாநாட்டுக்குக் கொண்டு செல்வதானால் முதலில் இரணைமடு குளத்திற்கு நேராக வடக்கே ஆனையிறவில் இருக்கும் யாழ்ப்பாணக் கடலேரிக்குக் கொண்டு செல்ல வேண்டும். பின்னர் அதை தொண்டமானாறு கடலேரிக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்படிக் கொண்டு செல்வதில் ஒரு தடங்கல் இருந்தது. அதாவது யாழ்ப்பாணக் கடலேரிக்கும், தொண்டமானாறு கடலேரிக்கும் இடைப்பட்ட பிரதேசம் நீரால் தொடுக்கப்படாத மணல் நிறைந்த தரைப் பிரதேசமாக இருந்தது.

எனவே மகாவலி கங்கையை யாழ்ப்பாணக் கடலேரியில் இருந்து தொண்டமானாறு கடலேரிக்குக் கொண்டு செல்வதற்காக இரண்டுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் சுமார் 5 மைல் பிரதேசத்திற்கு ஆழமானதும் அகலமானதுமான பெரிய கால்வாய் ஒன்று வெட்டப்பட்டது. அதேபோல, தொண்டமானாறு கடலேரியின் தொடக்கத்திலுள்ள உப்பு நீரை காற்றாடி மூலம் கடலுக்குள் இறைத்துவிட்டு,

மகாவலி நீரின் மூலம் அதைப் படிப்படியாக நல்ல நீராக மாற்றுவதற்காக செல்வச்சந்நிதி கோவிலுக்கு மேற்கே பெரிய மதகு ஒன்று கட்டப்பட்டதுடன், அருகிலுள்ள இடைக்காட்டுப் பகுதியில் பெரிய காற்றாடி ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆனால் அரசியல் மாற்றத்தாலோ அல்லது அரசு மனதை மாற்றியதாலோ என்னவோ, இத்திட்டம் பின்னர் நடைமுறைப் படுத்தப்படாது நிரந்தரமாக கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இத்திட்டம் அன்றே நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால் இன்று யாழ்ப்பாணம் தண்ணீருக்குத் தவித்துக் கொள்ளும் தேவை இருந்திருக்காது.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால், குமாரசாமியின் இந்த முயற்சியை அரசியல் காழ்ப்புணர்வுடன் நோக்கிய தமிழரசுக் கட்சி அதற்கு ஒத்துழைக்காதது மட்டுமின்றி, அ.அமிர்தலிங்கம் குமாரசாமியை எள்ளி நகையாடி, “என்ன குமாரசாமி மகாவலி தண்ணியை செம்பிலேயா கொண்டு வரப் போகிறார்?” எனக் கூட்டங்களில் பேசித் திரிந்ததுதான். (இன்று சிலர் “மகாவலி வந்தால் சிங்களக் குடியேற்றமும் வந்துவிடும் என்றுதான் அமிர்தலிங்கம் தீர்க்கதரிசனத்துடன் அப்படிப் பேசினார்” என இன்றைய நிலைமையை அன்றைய நிலையுடன் முடிச்சுப் போடவும் கூடும்)

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் பிரச்சினை குமாரசாமியுடன் முடிந்துவிடவில்லை. அதைப் பின்னர் 1956 தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய தோழர் பொன்.கந்தையா தனது கையில் எடுத்து நாடாளுமன்றத்தில் அதுபற்றிப் பேசியுள்ளார். அவரும் மகாவலியை வடக்கே திருப்பும் அவசியம் பற்றி நாடாளுமன்றத்தில் நீண்ட உரையொன்றை நிகழ்த்தியதை நாடாளுமன்ற பதிவேடான ‘ஹான்சாட்டை’ எடுத்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

இதன் பின்னரும் இந்தப் பிரச்சினையை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளையும் தனது கைகளில் எடுத்து வலியுறுத்தியது. அந்த விவசாயிகள் சம்மேளனம் 1969ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடத்திய பிரமாண்டமான விவசாயிகள் மாநாட்டில் இது சம்பந்தமான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள் சம்மேளனத்தின் இந்தத் தீர்மானத்துக்கு ‘வீரகேசரி’ போன்ற தேசியப் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளைப் பிரசுரித்திருந்தன.

ஆனால் அதன் பின்னர் சுமார் 50 வருடங்களாக இந்தப் பிரச்சினை பற்றி யாரும் கதைக்கவில்லை. ஆனால் இந்தக் காலகட்டத்தில் மகாவலி அதிகார சபை ஒன்று உருவாக்கப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மகாவலி நீர் கொண்டு செல்லப்பட்டு மக்கள் பயனடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் தரைகீழ் நீர் அதிக பாவனையால் உவர் நீராக மாறிக்கொண்டிருப்பதாலும், அடிக்கடி வரட்சி ஏற்படுவதாலும், அங்கு கடுமையான நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதைப் போக்குவதற்காக இரணைமடுக்குள நீரை யாழ்ப்பாணம் கொண்டு போவது பற்றியும், ஆழியவளையில் உள்ள கடல் நீரை நல்லநீராக மாற்றிப் பயன்படுத்துவது பற்றியும் ஆலோசிக்கிறார்களேயொழிய, தேசிய நதிகளில் ஒன்றை வடக்கே திருப்பி அதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி யாரும் ஆலோசிக்கவில்லை.

ஆனால் இரணைமடுத் தண்ணீர் கிளிநொச்சி மக்களுக்கே பற்றாமல் இருக்கையில் அதன் நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்வது சாத்தியமில்லாதது மட்டுமின்றி தர்மமும் ஆகாது. அதேபோல ஆழியவளை கடல் நீரை நல்லநீராக மாற்றுவதும் மிகுந்த செலவானதும் சாத்தியமற்றதுமாகும். இப்படியான ஒரு முயற்சியை தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்டு அது தோல்வியில் முடிந்தது இதற்கு நல்ல உதாரணமாகும்.

எனவே தேசிய நதிகளில் ஒன்றை – குறிப்பாக மகாவலியை வடக்கே கொண்டு செல்வதுதான் வடக்கின் நீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு சாத்தியமான வழி. ஆனால் மகாவலியை வடக்கே கொண்டுவரும் போர்வையில் அதனுடன் சேர்த்து சிங்களக் குடியேற்றமும் வந்துவிடும் என தமிழ் மக்கள் அஞ்சுவதில் நியாயம் இல்லாமல் இல்லை. அதற்குக் காரணம் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த, குறிப்பாக ஐ.தே.க. அரசுகள் திட்டமிட்டு மேற்கொண்ட சிங்களக் குடியேற்றங்கள்தான். (சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த ஐ.தே.கவின் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கதான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தவர் என்பதை இங்கு நினைவுகூர வேண்டும்)

ஒருகாலத்தில் “மகாவலி கங்கையை வடக்கே திருப்பு” எனக் கோசமிட்ட தமிழ் மக்கள் இன்று, “மகாவலி கங்கையை வடக்கே திருப்பாதே!” எனக் கோசமிடுவது காலம் ஏற்படுத்திய விந்தைதான். ஆனால் இது சரியான போக்கு அல்ல.

“மகாவலி கங்கையை வடக்கே திருப்பு” என்ற கோசத்தை தமிழ் மக்கள் மீண்டும் உரத்து ஒலிக்க வேண்டும். அதேநேரத்தில் “திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைச் செய்யாதே” என்ற கோசத்தையும் உரத்து ஒலிக்க வேண்டும். இதுதான் இந்தப் பிரச்சினையில் சரியான அணுகுமுறை.

இதைச் சாதிப்பதற்கு தமிழ் மக்கள் தனித்து நின்று போராட முடியாது. தென்னிலங்கையிலுள்ள சிங்கள முற்போக்கு சக்திகளினதும், நியாயத்தை விரும்பும் மக்களினதும் ஆதரவை வென்றெடுக்க வேண்டும். அதை விடுத்து தற்போதைய அரசுடன் வர்க்க ரீதியிலான காரணங்களுக்காக தேன்நிலவு கொண்டாடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. அதுமட்டுமின்றி, இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான இந்த நீண்ட காலத்தில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் அகிம்சை வழித் தலைமைகளும் சரி, ஆயுதப் போராட்டத் தலைமைகளும் சரி, இதுவரை காலமும் எதையும் உருப்படியாகச் சாதித்ததும் கிடையாது.

எனவே தமிழ் மக்கள் இந்த விடயத்திலாவது புதிய பாதையொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

# சோமேஸ்வரி அவர்களின் மறைவுக்கு அனுதாபமும் அஞ்சலியும்

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும், அதே பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஸ்ட பதிவாளரான தோழர் கிருஸ்ணகுமார் அவர்களின் துணைவியுமான சோமேஸ்வரி அவர்கள் சுகவீனம் காரணமாக அண்மையில் காலமானார் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*முற்போக்கு சிந்தனையுள்ள சோமேஸ்வரி பெண் விடுதலை மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற விடயங்களில் அக்கறையுடன் செயற்பட்ட ஒருவராவார்.*

*தமது குடும்பத் தலைவியின் பிரிவால் துயருற்றிருக்கும் கிருஸ்ணகுமார் மற்றும் பிள்ளைகளுக்கு ‘வானவில்’ சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாருக்கு எமது இறுதி அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

**‘வானவில்’ ஆசிரிய குழு**

# க. கைலாசபதி

*பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் 26ஆவது ஆண்டு நினைவாக (1933 – 1982) இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது*



மார்க்சிய இலக்கியம், திறனாய்வு, உயர்நிலைத் தமிழாய்வு, முதலாம் துறைகளில் எழுபாய்ச்சல்களை ஏற்படுத்திய ஆய்வாளர் பேராசிரியர் கைலாசபதி (1933 – 1982). இலக்கணம், இலக்கியம், மொழியியல், சமயம் என்ற வரையறைக்குள்ளே கட்டுப்பட்டிருந்த தமிழாய்வை சமூகவியல் என்ற பெரும் ஆய்வுப்பரப்புக்கு நகர்த்தி புதிய புலக்காட்சியைத் தோற்றுவித்த செயற்பாட்டிலும் அவரது பங்களிப்பு முக்கியமானது.

சமூகம் பற்றிய இயல்பைத் தெளிவுபடுத்தும் மார்க்சிய இயங்கியல் தர்க்கத்தினை கலை இலக்கிய பண்பாட்டுப் பிரயோக நிலைகளுக்குப் பயன்படுத்திய விதம் பேராசிரியர் கைலாசபதியின் எழுத்துக்களுக்கு ஈடில்லா வலிமையைக் கொடுத்தது. சமுதாயத்தையும் அதன் அமைப்பையும் அதன் இயக்கத்தையும் உள்ளவாறே பகுத்தறியும் மார்க்சியத்தை அடியொற்றிய அவரது கலை இலக்கியப் பார்வைகள் தமிழாய்வில் முன்னர் கண்டறியப்படாத பல தரிசனங்களை வெளிக் கொண்டு வந்தன.

இலக்கிய ஆய்வுகளில் அவ்வப்போது குறிப்பிடப்பட்ட சங்க இலக்கியங்களுக்கும் கிரேக்க இலக்கியங்களுக்கும் இடையிலான ஒப்புமை ஒரு மேலோட்டமான முன்மொழிவாக இருந்த நிலையில் அதனை ஓர் ஆழ்ந்த ஆய்வுத்தேடற் பொருளாக பேராசிரியர் கைலாசபதி முன்னெடுத்தார். அதன் அடிப்படையில் 'தமிழ் வீர நிலைக்கவிதை' என்பதை தமது கலாநிதி பட்டத்திற்குரிய ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுத்தார். 1966 ஆம் ஆண்டிலே பர்மிங்காம் பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட அந்த ஆய்வேடு ஒப்பியல் நிலையிலும் சங்க இலக்கிய பகுப்பாய்வு நிலையிலும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

சங்கம் பற்றிய மரபுவழிக் கதைகளையும் பண்பாட்டுக் கோலங்களையும் அகவயம் நீங்கிய ஆய்வுப் புறநிலையுடன் நோக்கினார். சங்ககாலம் வாய்மொழிப் பாடற் காலம் என்றும் சங்கப்பனுவல்கள் வாய்மொழிப் பாங்கினதென்றும் அக்காலம் வீர நிலைக் காலம் என்றும் தமது ஆழ்ந்த ஆய்வின் வழியாக வெளிப்படுத்தினார். வாய்மொழிப் பாடலாகக் கலைநுட்பம் தொடர்பான அவரது முன் மொழிவுகள் உலக இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகளிலே புதிய காட்சிகளைத் திறந்துள்ளன.

**சபா.ஜெயராசா**

பேராசிரியர் கைலாசபதியின் கல்விப் பின்புலம், அகல்நிலை, ஆழ்நிலை, பன்மை நிலை, முதலாம் பரிமாணங்களைக் கொண்டது. அவரது ஆரம்பக் கல்வி மலேசியாவில் உள்ள விக்டோரியா கல்வி நிலையத்தில் முற்றிலும் ஆங்கிலமொழி பேசும் சூழலில் நிகழ்ந்தது. அவரது இடைநிலைக்கல்வி பல்வேறு பன்மைப் பரிமாணங்களைக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைத் தொடர்ந்த காலத்தில் சைவச்சூழல் ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழிச்சூழல், கார்த்திகேசன் மாஸ்ரர், வைத்திலிங்கம் மாஸ்ரர் ஆகியோரை உள்ளடக்கிய மார்க்சிய சிந்தனைச்சூழல் முதலியவற்றின் ஊடாட்டங்களோடு அவரது கல்வி ஆளுமை மேலெழுந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஊடாட்டத்தால் உருவாக்கம் பெற்ற தமிழ்த் தேசியச் சிந்தனைகளுக்கும் கொழும்பு ரோயல் கல்லூரியிலே கற்றவேளை உருவாக்கம் பெற்ற இலங்கை தேசிய சிந்தனைகளுக்கும் இடையே முரண்பாடுகளற்ற இணக்கத்தைக் கண்டமை அவரின் மார்க்சிய ஆளுமையின் கள வெளிப்பாடு எனலாம்.

அந்தப் பின்னணியிலேதான் அவரும் அவரோடு இணைந்த முற்போக்கு எழுத்தாளர்களும் ஆறுமுகநாவலரை 'தேசிய வீரர்' என்ற தளத்துக்கும் 'காலனித்துவ மறுதலிப்பாளர்' என்ற அடையாளத் தளத்துக்கும் இட்டுச் சென்றனர். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான செயற்பாட்டாளர் வரிசையில் நாவலரின் முன்னைய பங்கு பேராசிரியரால் வலியுறுத்தப்பட்டது.

பேராசிரியரின் தமிழ்த்தேசியம் பற்றிய சிந்தனையின் நடைமுறை வெளிப்பாடாக அமைந்தது, அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று (1974) கொழும்பை விட்டு நீங்கி திருநெல்வேலியில் நிலம் வாங்கி நிரந்தரமாகக் குடியமர்ந்தமை ஆகும். புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகத்துக்கு தென்னிலங்கையிலே பணியாற்றிய தமிழ்ப்பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் வருவதற்குத் தயக்கம் காட்டிய நிலையை பேராசிரியர் கைலாசபதி ஓர் அறைகூவலாக எடுத்துக்கொண்டு அந்த வளாகத்தை தரநிலையில் மேம்படுத்துவதற்குரிய, ஒன்றிணைந்த கட்டமைப்பு நடவடிக்கைகளையும் புலமை நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை அடையாளப்படுத்துதல், பிரதேசங்களின், தனித்துவங்களைக் கண்டறியும் ஆய்வுகளை முன்னெடுத்தல், முதலாம் ஆய்வு முயற்சிகளுக்குத் தளமாக யாழ்ப்பாண வளாகத்தை அமைக்கும் செயற்பாடுகளை பேராசிரியர் கைலாசபதி முன்னெடுத்தார். இராமநாதன் நுண்கலைக்கழகத்தை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் செயற்பாடும் அவரால் முன்னெடுக்கப்பட்டது. தமிழரின் கலைகளை பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்தும் செயற்பாட்டில் பேராசிரியர் கைலாசபதியின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. இலங்கைத் தேசியத்துக்கும் தமிழ்த்தேசியத்துக்கும் புலக்காட்சி, அவர் பல்கலைக்கழக மாணவராக இருந்த காலத்திலே தோற்றம் பெற்றுவிட்டது. எழுச்சிகொண்ட ஆங்கிலச் சூழலில் வளர்ந்த அவர் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழியை சிறப்புப் பயில்வுக்குத் தெரிதெடுத்தமை குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒரு கல்விச் சம்பவமாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை

அவர்களின் புலமைச் செயற்பாடுகளும், பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமிழர் சால்பு தொடர்பான ஆய்வுகளும், பேராசிரியர் வி.செல்வநாயகம் மேற்கொண்ட தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுகளும், அவர்மீது செல்வாக்குகளை ஏற்படுத்தின. அத்தகைய வளமான புலமை பின்புலத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் எழுபாய்ச்சலுமாக (LEAP) அவரது செயற்பாடுகள் அமைந்தன. அவரின் பெரும் ஆய்வுத் தேடலுக்கு அவரிடத்தே காணப்பெற்ற ஆழ்ந்த வாசிப்புப் பழக்கமும் சமூகவியல் மற்றும் மார்ச்சியப் புலமையும் வழியமைத்தன.

தமது சிறப்புப் பட்டத்தை முடித்துக்கொண்டு லேக்கவுஸ் நிறுவனத்தில் இதழாசிரியர் பதவியைப் பெற்ற அவர் இலங்கையின் தேசிய இலக்கிய உருவாக்கத்தில் தினகரன் இதழைத் தளமாக பயன்படுத்தினார். தேசிய இலக்கிய உருவாக்கத்தில் மலையக எழுத்தாளர்களின் பங்கு, சமூகத்தின் நலிவடைந்த பிரிவினரின் எழுத்தாக்கங்களின் வகிபாகம், இஸ்லாமிய எழுத்தாளரின் ஆக்கங்கள் முதலியவற்றின் முக்கியத்துவம் அவரால் உணரப்பட்டது. சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் ‘வாழ்வற்ற வாழ்வு’, ‘எல்லைப்புறம்’ முதலான தொடர் நாவல்கள் தினகரனில் வெளியிடப்பட்டன. டொமினிக் ஜீவா, டானியல் முதலானோரின் ஒடுக்கப்பட்டோர் அழகியல் தழுவிய சிறுகதைகள் தினகரனில் இடம்பெற்றன. இளங்கீரனின் ‘நீதியே நீ கேள்’ தொடராக வெளியிடப்பட்டது. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும்படி கனக செந்திநாதனை உற்சாகப்படுத்திய பேராசிரியர் அந்த ஆக்கத்தை தினகரனில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

லேக்கவுஸ் நிறுவனத்தை விட்டு நீங்கி, பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியைப் பெற்றுக்கொண்ட அவர் தொடர்ந்து இதழ் எழுத்துப் பணியை முன்னெடுத்தார். தேசிய இலக்கியம், நாட்டார் இலக்கியம், மார்க்சிய இலக்கியம், ஒடுக்கப்பட்டோர் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், மூன்றாம் உலக இலக்கியம், திறனாய்வு, மதிப்பீடு முதலான துறைகளில் ஆழமும் விரிவும் கொண்ட கட்டுரைகளை எழுதினார். தேசாபிமானி, தொழிலாளி, செம்பதாகை, இளங்கதிர், புதுமை இலக்கியம், மல்லிகை, மரகதம், வசந்தம், தாயகம், சமர், சிந்தனை முதலான இதழ்களில் அவரது ஆக்கங்கள் வெளிவந்தன.

அம்பலத்தான், அம்பலத்தாடி, ஜனக மகன், பரமன், அபேதன் முதலான புனைபெயர்களையும் அவ்வப்போது பயன்படுத்தினார்.

ஆற்றல்மிக்கோரை இனங்கண்டு வெளிக்கொண்டுவரும் நல்லாசானுக்குரிய ஆளுமை வீச்சு அவரிடத்தே காணப்பெற்றது. அவ்வகையில் அ.முத்துலிங்கம் அவர்களை சிறுகதை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களின் கலை ஆளுமையை வெளியீட்டுக் களத்திற்குக் கொண்டு வந்தார். பெனடிக்ற்பாலன், யோகநாதன், கதிர்காமநாதன் முதலான இளம் எழுத்தாளர்களின் ஆற்றல்களைக் கண்டறிந்து அவர்களின் ஆக்கங்களுக்கு தினகரனில் வெளியீட்டு வடிவம் கொடுத்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வளர்ச்சியிலும் அதன் கொள்கை ஆக்கத்திலும் அக்காலத்தில் மேல் எழுந்த மார்க்சிய கலை இலக்கியம் தொடர்பான கருத்து வினைப்பாடுகளிலும் (Discourses) பேராசிரியர் கைலாசபதியின் புலமை வகிபாகம் முக்கியமானது.

கடந்த நூற்றாண்டின் அரைப்பகுதியிலிருந்து படைப்பிலக்கியம் கருத்து வினைப்பாடுகள் மேலெழுந்தன. நடப்பியல் இலக்கியம், சோசலிச நடப்பியல் இலக்கியம், இயற்பண்பு (Naturalism) சார்ந்த இலக்கியம் முதலான கருத்து வடிவங்களின் தெளிவை பேராசிரியர் கைலாசபதி தமது எழுத்துக்களின் வாயிலாகவும் பேச்சுக்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்தினார்.

அடிநிலை மக்களின் பேச்சுமொழியை புனைகதைகளில் எடுத்தாள்வதை இலக்கியம் பற்றிய தெளிவற்றவர்கள் ‘இழிசனர் வழக்கு’ என்று மறுதலித்தனர். செந்தமிழ் நடையிலேதான் இலக்கியங்கள் ஆக்கப்படல் வேண்டும் என வாதாடிய வேளை இலக்கியப் புனைகதைகளில் பேச்சுமொழியின் முக்கியத்துவத்தை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தக்க சான்றுகளுடன் வலியுறுத்தினார்.

அக்காலத்தைய கருத்துவினைப்பாடுகளுள் ‘மரபு’ என்பது அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. மரபு என்பது மாற்றமுறாத இறுகிய வடிவம் என்பதை ஒரு சாரார் வாதிடத் தொடங்கினர். மாற்றங்களை விளங்கிக் கொள்ளாத தீவிரமான பழமைவாதிகளிடமிருந்து அந்தக் கருத்து மேலெழுந்தது.

மரபை மார்க்சிய இயங்கியற் கண்ணோட்டத்திலே பேராசிரியர் விளக்கினார். எதிரெதிர் விசைகளினூடே மாற்றங்கள் நிகழ்தல் தவிர்க்க முடியாதென்பதை அவர் தெளிவுபடுத்தினார். வுளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் இடையேயுள்ள இடைத்தொடர்புகளை வெளிக்கொண்டு வந்தார்.

முற்போக்கு இலக்கிய இயக்கத்தை ஒருசாரார் பிராய்டிச (Freudian) தளத்தில் நின்று எதிர்த்தனர். இன்னொரு சாரார் சமூக நிராகரிப்பை உள்ளடக்கிய தூய அழகியல்வாதத்தை அடியொற்றி எதிர்த்தனர். அத்தகைய கோட்பாட்டுத் தளங்களில் மட்டுப்பாடுகளையும் பிற்போக்குத் தனங்களையும் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் புறவய நிலையில் நின்று தெளிவுபடுத்தினார்.

அவரின் மார்க்சிய மெய்யியல் உரையாடல்கள் சமூகத்தின் அடித்தளத்தினின்றும் ஒடுக்கப்பட்டோரதும் உணர்வுகளைச் சுமந்த கலையாக்கங்களுக்கு விசையூட்டின. டானியலும் ஜீவாவும் துணிவுடன் எழுதுவதற்குரிய கருத்தியல் விசை வழங்கப் பெற்றது.

உலக அரங்கிலே சோவியத் – சீன கருத்தியற் பிளவு வளர்ச்சியடையத் தொடங்கிய நிலையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பிளவுபடாது இயங்கியமை சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒரு தோற்றப்பாடாகும்.

நவீன இலக்கியங்களிலே பேராசிரியருக்கு இருந்த அறிவும் புலமையும் அவரது ஆளுமையின் ஒரு பரிமாணம். பிறிதொரு பரிமாணம் பழைய இலக்கியங்களிலும் தொல்சீர் படைப்புகளிலும் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமை. இலக்கிய நிலையில் அது இருதளப் புலமை எனப்படும். தமிழியல் ஆய்வாளர் வரிசையில் இவ்வாறு இருதளப் புலமை கொண்டோர் ஒருசிலரே. இலக்கியப் பரப்பு நிலையில் மட்டுமின்றி மொழி நிலையிலும் இருதளப் புலமை அவரிடத்தே காணப்பட்டது. அதாவது தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் உயர்நிலையான ஆய்வுகளை மேற்கொள்ளும் வளமான மொழி ஆழம் அவரின்

எழுத்துகளுக்குப் பலத்தைக் கொடுத்தன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இருபத்தைந்திற்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதினார்.

அவரின் ஆங்கில ஆய்வு நூலாகிய Tamil Heroic Poetry உலகளாவிய இலக்கிய ஆய்வுப்பரப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது. தொன்மையான உலக இலக்கியங்களை ஆய்வு செய்வோர் நிச்சயம் பார்க்க வேண்டிய நூலாகவும் உள்ளது. தமிழியல் ஆய்வின் விரிவை உலகப் பரப்புக்கு இட்டுச்சென்ற நூல்களுள் ஒன்றாகவும் அது விளங்குகின்றது.

பல்வேறு நூல்களுக்கு அவர் எழுதிய அணிந்துரைகள், ஒரு புதிய ஆய்வு வடிவத்தையும் 'அணிந்துரை இலக்கியம்' என்று அடையாளப்படுத்தப்படக்கூடிய புதிய கலை வடிவத்தையும் தோற்றுவித்துள்ளது. தமிழியல் நோக்கும் மார்க்சியப் பார்வையும் கலந்த தனித்துவத்துடன் அவரின் அணிந்துரைகள் அமைந்திருந்தன.

பிரயாண இலக்கியத்திற்கும் பேராசிரியர் கைலாசபதி புதிய பரிமாணங்களை ஏற்றினார். அவரும் அவரது மனைவியும் சீனாவுக்குச் சுற்றுலா சென்ற அனுபவங்கள் காட்சி நிலையையும் கடந்து சோசலிசத்தின் நடைமுறைச் செம்மைகளின் தரிசனத்தோடு விரவிய பதிவுகளாகின. அது பிரயாண இலக்கியத்தில் புதிய பதிவுகளைத் தோற்றுவித்தது. மார்க்சியம் சமூகத்தைத் துண்டங்களாக நோக்கவில்லை. அனைத்து கூறுகளையும் அனைத்து முரண்பாடுகளையும் உள்ளடக்கிய ஊடுநிறை செயலமைப்பாக (Integral System) கருதுகின்றது. அதன் பின்புலத்தில் சமூகத்திலிருந்து மேலெழும் எழுத்துக்களை அவர் ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கவில்லை. சமூகத்தின் பன்முக வழுக்களின் பின்புலத்திலும் வர்க்க சார்பு நிலையிலும் இலக்கியங்களை நோக்கினார். அது நோக்கு முறைமைக்கு வலிமையைக் கொடுத்தது. அதனை அவரின் கூற்றாகவே நோக்கலாம்.

**அ.** 'எமது கலை, இலக்கியம், சமயம் முதலிய துறைகள் பற்றி எழுதுவோரிற் பெரும்பாலானோர் அவற்றுக்கும் சமூகத்துக்குமுள்ள பிணைப்பை வலியுறுத்துவதில்லை, அல்லது வேண்டுமென்றே கூறுவதில்லை'

**ஆ.** மற்றெல்லாத் துறைகளைப் போலவே எமது இலக்கிய உலகிலும் மூட நம்பிக்கைகள் நிறையவுள்ளன. விஞ்ஞான நோக்குடனும் துணிவுடனும் பிரச்சினைகளை அணுகினாலன்றி நாம் முன்னேறப் போவதில்லை. (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், முகவுரை)

சமய முரண்பாடுகளின் எழுச்சியும் தத்துவங்களின் தோற்றமும் வர்க்கப் பின்புலத்தை அடியொற்றி எவ்வாறு எழுகோலம் பெறுகின்றன என்பதை தமிழ்ச் சூழலில் விளக்கிய முன்னோடி ஆய்வாளராக பேராசிரியர் கைலாசபதி விளங்குகின்றார். வர்க்க நிலைப்பாட்டை சமூக இயங்கியலுடன் தொடர்புபடுத்தி எவ்வாறு விளக்கினார் என்பதைக் கண்டு கொள்வதற்கு பின்வரும் சித்தரிப்பு வகைமாதிரியாக உள்ளது.

'பல்லவர் ஆட்சிக்காலத்திலே தமிழ் நாடெங்கிலும் உயிர்த்துடிப்புள்ள இயக்கமொன்று நடந்தேறியது. அவ்வியக்கம் பெரும்பாலும் சமணராக இருந்த வணிக வர்க்கத்தினருக்கும் வைதிகர்களாக (சிறப்பாக சைவராக) இருந்த நிலவுடமை வர்க்கத்தினருக்குமிருந்த பொருளாதார முரண்பாட்டின் விளைவாகும். பல்லவ மன்னர் சிலரும் பாண்டிய மன்னரும் சமண பௌத்த மதத் தத்துவங்களுக்கு அடிமைப்பட்டு வணிக வர்க்கத்தினருக்கு நாட்டின் பொருளாதார வாழ்விற் பெரும் பாத்திரத்தைக் கொடுத்திருந்த காலையில், நிலவுடமை வர்க்கத்தினர் சமுதாயத்திலே கீழ்நிலையிலிருந்த பலசாதி மக்களையும் ஓரணியிலே நிறுத்திப் போர் தொடுத்தனர். இந்த வர்க்கப் போரே தத்துவ உலகில் சமண – சைவ மோதலாகத் தோன்றியது' (பேரரசும் பெருந் தத்துவமும்)

பேராசிரியரின் ஆய்வுகளும் எழுத்துக்களும் மரபுவழித் தமிழியல் ஆய்வின் தேக்க நிலைகளைத் தகர்த்தன. சமூகவியல் தழுவிய புதிய புலக்காட்சிகளை தோற்றுவித்தன. ஆய்வு நிலையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தின. மார்க்சியத்தை வெறும் அரசியல் சுலோகமாகக் கருதிய தமிழ்ச் சூழலில் அதன் ஆழங்களைத் தமிழியலோடு தொடர்புபடுத்திய பேராசிரியரின் புலமைப் பங்களிப்பு காலவிளிம்பைக் கடந்து நிற்கின்றது.

உலகளாவிய ஆய்வு மாநாடுகளிலே கலந்துகொண்ட பேராசிரியர் கருத்தாழமிக்க ஆய்வேடுகளைச் சமர்ப்பித்தார். கலிபோர்னியா பல்கலைக்கழகம், சுயோவா பல்கலைக்கழகம் முதலியவற்றுடன் இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் அதிதிப் பேராசிரியராக இருந்து தமிழியலில் தளவிரிவை ஏற்படுத்தினார். பல்வேறு அரச கழகங்களிலும் பண்பாட்டுக் கழகங்களிலும் உறுப்பினராக இருந்தவேளை பிறரைப் போன்று மத்தியதர வர்க்க மனோபாவ வீச்சுக்குள் சென்றுவிடாது ஒடுக்கப்பட்டவர்களின் குரலையும் பிரதிகூலமெய்தியோர் உணர்வுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அவரின் வெற்றிகளிலே சமபங்கு கொண்டு உழைத்தவர் துணைவியர் சர்வமங்களம். அவர்களின் இலட்சிய வழியை பிள்ளைகள் சுபமங்களாவும் பவித்திராவும் தொடர்கின்றனர்.

(இக்கட்டுரை இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் தொகுத்து வெளியிட்ட 'இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள்' என்ற நூலிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையை எழுதிய பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைகத்தின் கலைப்பீட பதில் தலைவராகவும், நுண்கலைப் பீடத் தலைவராகவும் இருந்து ஓய்வு பெற்றவராவர்)

# கருத்தரங்கு

அண்மையில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாவலி ஆற்றினை முல்லைத்தீவுவரை திருப்பும் உத்தேசத்தை பிரகடனப்படுத்தியதைதொடர்ந்து பலவித கருத்துக்கள், ஆர்ப்பாட்டங்கள் இன்னமும் தொடர்ந்து வருவதை காணலாம்.

இதைத் தொடர்ந்து,

**"Mahavali (L) வாழ்வும் அரசியலும்"** என்ற தலைப்பில் அக்டோபர் 27ம்திகதி 2018 மாலை 3மணியிலிருந்து 6மணி வரை Canada - Scarborough Civic Centre, Committee Room # 2, 150 Borough Drive,Scarborough (McCowan and Ellesmere) இல் ஒரு கலந்துரையாடல் நடத்தப்படும்.

இவ்விடயம் சம்பந்தமாக நீங்களும் பங்குபற்றி உங்கள் கருத்தினை மற்றவர்களுடன் பகிர வேண்டுகிறேன்.

***ரட்னம் கணேஷ்***

**Canadians for Peace Sri Lankan Alliance with**
**Movement for Equal Rights**

## ஐ.தே.கவும் சந்திரிகவும் நெல் சந்தைப்படுத்தும் சபையை ஒழித்துக்கட்ட முயன்றனர்!

### *ஜனாதிபதி குற்றம் சாட்டுகிறார்!!*

"நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளை முதலாளிகளின் சுரண்டலில் இருந்து பாதுகாப்பதற்காகவே 1971இல் அப்போதைய சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால் நெல் சந்தைப்படுத்தும் சபை உருவாக்கப்பட்டது. ஆனால் 1993இல் ஐ.தே.க. அரசாங்கத்தால் இச்சபை மூடப்பட்டது. மீண்டும் திறக்கட்ட இச்சபையை 2000ஆம் ஆண்டில் சந்திரிக குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் திரும்பவும் மூடுவதற்கு முயற்சித்தது. நான் அரசாங்கத்தின் அத்திட்டத்தை 17 அமைச்சர்களுடன் சேர்ந்து முறியடித்தேன்"

இவ்வாறு கூறியிருக்கிறார் 'நல்லாட்சி' அரசாங்கத்தின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. வடமேல் மாகாணத்தில் குளங்களை புனருத்தாரணம் செய்யும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

"நான் ஆறுகளுடனும், குளங்களுடனும், வயல்களுடனும் மற்றும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளுடனும் சிறு வயது முதலே சேர்ந்து வளர்ந்தவன். எனவே எனக்கு விவசாயிகளின் கஸ்டங்கள் பற்றி மிகவும் தெளிவாகத் தெரியும்" எனவும் கூறினார்.

•

## 'தமிழீழ'த்தின் இரண்டு பக்கங்கள்!

யாழ்ப்பாணத் தமிழர்களின் பெருமையையும், புகழையும், தெய்வ பக்தியையும் உலகிற்கு எடுத்து இயம்பும் ஸ்தலமாக நல்லூர் கந்தசாமி கோயில் விளங்குகிறது என்றால் அது மிகையான கூற்று அல்ல. அந்த நல்லைக்குமரன் பள்ளி கொள்ளும் ஆலயத்தின் கூரையை சமீபத்தில் தங்கத் தகடுகளால் வேய்ந்துள்ளார்கள்! இதை எண்ணி எண்ணி ஒவ்வொரு தமிழனும் புளகாங்கிதம் அடைகிறான். ஒரு காலத்தில் தமிழர்களின் இராசதானியாக நல்லூர் இருந்ததையும் சில தமிழர்கள் நினைவுகூரத் தவறவில்லை.

ஆனால் இந்தப் பெருமையை சிறுமையாக்கும் வகையில் இதே வட மாகாணத்தில் உள்ள முறிகண்டியில் துயரச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. அங்கு வாழும் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் பாடசாலைச் சீருடை வாங்கப் பணமில்லாததால் தற்கொலை செய்துகொண்டு இறந்து போயுள்ளார். இந்தத் துயரச் சம்பவம் பற்றி அரசியல்வாதிகளோ அல்லது தமிழ் ஊடகங்களோ பெரிதாக அலட்டிக் கொண்டதாகவும் தெரியவில்லை.

இந்தத் துயரச் சம்பவம் வெறுமனே ஒரு சிறுமியின் பிரச்சினையல்ல. தமிழ்ப் பகுதிகளில், அதிலும் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் இந்த நிலைதான் நிலவுகின்றது.

ஆண்டவன் சந்நிதானத்திற்கு தங்கக்கூரை போடும் 'பெருந்தகைகள்' இந்த மாதிரியான ஏழைப் பிள்ளைகளின் கல்வி முயற்சிக்கு சில வெள்ளிகளையாவது செலவழித்தால் என்ன?

•

## எரிபொருள்களின் விலை திடீர் உயர்வு!

அரசாங்கம் பெற்றோலின் விலையைத் திடீரென அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு மக்களுக்குப் பலவிதமான பொருளாதாரச் சுமைகளை ஏற்படுத்தப் போகின்றது. இந்த விலை அதிகரிப்பைக் காரணம்காட்டி புகையிரதத் திணைக்களம் போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது. அதேபோல தனியார் பேருந்துச் சேவையினரும் தமது கட்டணங்களை 10 சதவீதத்தால் அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். அதுமட்டுமல்ல, முச்சக்கர வண்டிகளும் தமது கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய தேவை எழும். இன்னும் பலவிதங்களில் இந்த எரிபொருள் கட்டண அதிகரிப்பு மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது.

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற பொருளதாரக் கொள்கையே இந்தவிதமான விலை அதிகரிப்புகளுக்குக் காரணம் என கூட்டு எதிரணியின் பொருளாதார விமர்சகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்திருக்கிறார். அரசாங்கம் பின்பற்றி வரும் திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கையின் காரணமாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக மோசமான வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதன் காரணமாக எதிர்வரும் மாதங்களில் அரசாங்கம் மக்களின் தலைகளில் மேலும் பல சம்மட்டி அடிகளைக் கொடுக்கக் காத்திருக்கிறது.

•

## விசம் கலந்த பால் நிதியமைச்சு வாகனங்களிலேயே கொண்டுவந்து விநியோகிக்கப்பட்டுள்ளன!

### *மகிந்த கூறுகிறார்!!*

கூட்டு எதிரணி கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அதில் கலந்து கொண்டவர்களுக்கு இனம் தெரியாதவர்களால் விசம் கலந்த பால் பக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதனால் பலர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஐக்கிய தேசியக் கட்சியே இதன் பின்னணியில் இருந்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார். இதுபற்றி அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது அவர் தந்த பதில் கீழே தரப்பட்டுள்ளது.

"இவை எங்கிருந்து வந்தன என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. கொண்டு வந்த வாகனங்கள், அதை விநியோகித்தவர்கள் யார் என்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. சி.ஐ.டியினர் இதைப் பொறுப்பேற்று விசாரணையை நடத்த வேண்டும். பலர் இன்னும் நோய்வாய்ப்பட்டுள்ளனர். டலஸ் எம்.பியும் இன்னும் சுகவீனமாக இருக்கின்றார். குறித்த பால் பக்கற்றுகள் அரசாங்க நிறுவனத்துடன் தொடர்புடையது. அவை நிதியமைச்சின் வாகனத்திலேயே விநியோகிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான தகவல்கள் வெளியே வந்துள்ளன என அவர் கூறியுள்ளார்."
(தினக்குரல்)

## போதைப் பொருள்களுடன் கியூபாவுக்குள் பிரவேசிக்க முடியாது!

இவ்வருடம் யூன் 20ஆம் திகதி கனடிய நாடாளுமன்றம் 7மாத கடுமையான வாதப்பிரதிவாதங்களின் பின் நாட்டில் Marijuana என்ற போதைப் பொருள் பாவனைக்கு அனுமதி அளித்தது. இந்த அனுமதியை அளித்த உலகின் இரண்டாவது நாடு கனடா ஆகும். 2013இல் தென் அமெரிக்க நாடான உருகுவே இதற்கு அனுமதியளித்திருந்தது.

கனடாவின் இந்த அனுமதியைத் தொடர்ந்து, இந்த வகையான போதைப் பொருளுடன் கனடாவிலிருந்து கியூபா வரும் எவரும் நாட்டுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என கியூப அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ஊடக மாநாடொன்றில் விளக்கமளித்த கியூபாவின் தேசிய போதைப்பொருள் ஆணையத்தின் செயலாளர் Antonio Israel Ybarra “நீங்கள் யாரும் எந்தவகையான போதைப் பொருளுடனும் கியூபாவுக்குள் நுழைய முடியாது” எனக் குறிப்பிட்டுள்ளார். வைத்தியத் தேவைகளுக்காக இந்தப் போதைப் பொருளைப் பாவிக்கும் தேவையை வலியுறுத்தும் சான்றிதழ்களையும் கியூபா ஏற்றுக் கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

போதைப் பொருள்களுடன் கியூபாவுக்கு வரும் பிற நாட்டவர்கள் உடனடியாகவே அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் நடைமுறை உள்ளது. கியூப நாட்டவர்கள் யாராவது அவ்வாறு வந்தால் அவர்களுக்கு தண்டம் விதிக்கப்படுவதுடன், கொண்டு வரப்படும் போதைப் பொருட்களும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

தென் அமெரிக்காவில் உள்ள பல நாடுகளில் போதைப் பொருள் கடத்தலும், அதன் பாவனையும் அதிகமாக இருப்பதுடன், சில நாடுகளில் உள்ள அரசாங்கங்களை போதைப் பொருள் கடத்தல்காரர்களே வழிநடத்தும் நிலையும் உள்ளது. ஆனால் சோசலிச நாடான கியூபாவில் மனித குலத்துக்கு நாசம் விளைவிக்கும் இப்பொருள்களுக்கு கடுமையான தடை உள்ளது.

அமெரிக்க கண்டத்தைப் பொறுத்தவரையில் கியூபாவே அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடாக இருக்கின்றது. வருடமொன்றுக்கு 1.1 மில்லியன் மக்கள் அங்கு சுற்றுலா செல்கின்றனர். அதற்குக் காரணம் அங்குள்ள இயற்கை அழக நிறைந்த கடற்கரைகள், குறைவான கட்டணங்கள் என்பனவற்றுடன், அங்கு குற்றச் செயல்கள் இடம் பெறுவதில்லை என்பதும் பிரதான காரணமாகும்.

•

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,000 குளங்களைப் புனரமைக்க அங்கயன் முயற்சி!

அண்மையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நிகழ்வு ஒன்றில் பேசிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதியமைச்சர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 1,000 குளங்களை அடுத்த இரண்டு வருடங்களில் புனரமைக்க தான் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கான முயற்சிகளுக்கு இந்திய அரசாங்கத்தின் உதவியைப் பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடைய இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அதுவும் தேசியப் பட்டியல் உறுப்பினர், வடக்கு மக்களின் மிகவும் ஜீவாதாரமான ஒரு பிரச்சினை குறித்து சிந்தித்திருக்கிறார் என்பதே பாராட்டுக்குரிய ஒரு விடயமாகும். ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சரி, அதற்கு முதல் இருந்த பிரதான தமிழ் கட்சிகளும் (வடக்கு மாகாண சபை உட்பட) சரி, தமிழ் தேசியவெறியை ஊட்டி மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதிலேயே கண்ணாய் இருந்திருக்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் இந்த மாதிரியான அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து மறந்தும்கூட சிந்தித்தது கிடையாது.

இதில் இன்னொரு முக்கியமானதும், மகிழ்ச்சியானதுமான விடயம் என்னவெனில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,000 குளங்கள் இருக்கிறது என்ற அங்கயனின் தகவல். உண்மையில் இந்தக் குளங்கள் அத்தனையையும் தூர்வாரி, அணைக்கட்டுகளை உயர்த்தி, பருவ மழை பெய்யும்போது அவற்றில் போதியளவு நீரைத் தேக்கி வைத்தாலே, நிலத்தடி நல்ல நீர்மட்டம் உயர்ந்து, தற்போது யாழ்ப்பாணத்தின் பல கிணறுகளில் காணப்படும் உவர்ப்புத் தன்மை நீங்குவதுடன், நீர்த்தட்டுப்பாடும் நீங்கும். இது இந்தியா உட்பட பல நாடுகளில் பரீட்சிக்கப்பட்ட உண்மையாகும்.

இந்த முயற்சி உரிய முறையில் நிறைவேற்றப்படுமாக இருந்தால், இரணைமடுக்குள தண்ணீருக்கு ஓடுவதற்கோ, ஆழியவளை கடல் தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றுவதற்கோ, “மகாவலி கங்கையை வடக்கே திருப்பாதே” என்று கோசமிடுவதற்கோ தேவையிருக்காது.

ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக மு.சந்திரகுமார் இருந்தபோது, கட்சித் தலைமையினதும், அரசாங்கத்தினதும் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் சில குளங்களைப் புனரமைத்திருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் யாழ் மாவட்டத்தில் 300 மேற்பட்ட குளங்களைக் காணவில்லையென சிரேஸ்ட பொறியியலாளர் மா.இராமதாசன் தெரிவித்துள்ளார். இவரும் இவரது நண்பர்களும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் 8 குளங்களை புனரமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

•

## சீன நிறுவனத்திடம் இலஞ்சம் கேட்கும் அரசியல்வாதி!

இலங்கையின் ஜின் நில்வல கங்கையின் நிர்மாணப் பணிகள் சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு பன்முக வளர்ச்சித் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறுதல், விவசாயத்துக்கான நீர்ப்பாசன வசதி, மின்சார உற்பத்தி என்பன அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குக் கிடைக்கும்.

ஆனால் இந்தத் திட்டத்தை சீன நிறுவனத்துக்கு வழங்குவதானால் தமக்கு பெருந்தொகை பணத்தை இலஞ்சமாகத் தர வேண்டும் என ஒரு முக்கிய அரசியல்வாதியும், உயர் அதிகாரியொருவரும் சீன நிறுவனத்திடம் கோரி வருவதாக அந்த நிறுவனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது. அண்மையில்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சில அரசியல்வாதிகள் இஞ்சம் கோரி முட்டுக்கட்டை போடுகின்றனர் என மைத்திரியும் குறிப்பிட்டிருந்தார்.

‘கடவுள்’ அனுமதி கொடுத்தாலும் இந்த அரசியல் பூசாரிகள் எதையும் செய்ய விடமாட்டார்கள் போல் தெரிகிறது.

***மகாகவி சுப்ரமணிய பாரதி மரணித்த தினம் 1921 செப்ரெம்பர் 11 ஆகும். அவரது நினைவாகவும், சோவியத் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் (1917) நினைவாகவும், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோராலும் மதிக்கப்படும் தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் இற்றைக்கு 55 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய இக்கட்டுரை பிரசுரமாகின்றது.***

# அக்டோபர் புரட்சியும் - அமரகவி பாரதியும்

பாரதப் புலவர்களுக்கெல்லாம் நடுநாயகனாக, பாரதப் புரட்சிப் புலவர்களுக்கு முதல்வனாக நின்று புதுமைப் பணியும், புரட்சிக் கடமையுமாற்றிய மகாகவி சுப்ரமண்ய பாரதி பாருலகைப் பார்த்தான். வளரும் வரலாற்று நோக்கிலே நிகழ்ச்சிக் கோர்வைகளை உற்று நோக்கினான். அவனி எங்கனும் ஆர்த்தெழுந்து வெற்றி முரசம் கொட்டிய விடுதலை நாதத்தை – சுதந்திரப் போர்க்குரலைக் கேட்டான். பெல்ஜியத்திலே, அயர்லாந்திலே இன்னும் பல நாடுகளிலே தேசாபிமான மணிக்குரல் ஓங்கார முழக்கமிடுவதற்கு செவிமடுத்தான்.

தாயக மக்களின் விடுதலையில் சுதந்திர வளர்ச்சியில் நாட்டமும், நற்தேட்டமும் கொண்டவராய் வாழ்ந்த பாரதியை, இந்திய சுதந்திர ஆவேசம், போராட்டப் படையெழுச்சி ஆட்கொண்டது, ஆர்த்தெழச் செய்தது. தனது உள்ளத்து உணர்ச்சிகளை, இதயத்துக் கிளர்ச்சிகளை, நாளங்களிலும் நரம்புகளிலும் மின்சக்தி எனப் பாய்ந்து 'விண் விண்' என வீரகோசம் செய்த சுதந்திர ஆவேசத் துடிப்புகளை, மொழிக் கோர்வையாக்கி சாகாத கவிதையாக்கி, சிரஞ்சீவிப் பர்வதமாய் வாழ உரம்பெற்ற அமர பாட்டுக்களாக்கி பாரத சமுதாயத்திற்கு அர்ப்பணித்தான் அப்புரட்சிப் புலவன்.

தேசிய விடுதலைக்காக, சுதந்திர வாழ்வுக்காக அகிலமெங்கும் நடைபெற்ற போராட்டங்கள், உலக விடுதலையின் அங்கங்களாக அவனுக்குத் தோற்றின. இந்திய சுதந்திர முழக்கத்தையும் உலகத்து விடுதலைத் தொடர்ச்சியின் ஒரு மணிச்சரமாக்கினான் புதுமைப் பாவலன் பாரதி.

இந்த வேளையில் -

இவைகளுக்கெல்லாம் மேலாக மகத்தானதாக, மகோன்னத வரலாற்று நிகழ்ச்சியாக அக்டோபர் புரட்சியின் வெற்றிவாகை அவன் காதுகளை எட்டியது.



***தோழர் மு.கார்த்திகேசன்***

மானுடன் புகழ்பாடும் பாவலனான, விடுதலை வேண்டும் மனிதனாக, அடிமைத் தளையறுத்த சமுதாய கனவுகண்ட புரட்சி வீரனாக வாழ்ந்த பாரதப் புலவனுக்கு அக்டோபர் புரட்சியின் வெற்றி, ஆதர்ஸமாக முன்னின்று ஊக்கமும் உற்சாகமும் தந்தது. அக்டோபர் புரட்சியின் உத்வேகத்திலே புரட்சிப் பாக்கள் யாத்த பாரதி, தனது மணிக்குரலின் வேகத்தினால் லட்சோப லட்சம் மக்களைக் கவர்ந்தான், சுதந்திர எழுச்சிப் பாதையிலே அவர்களை அணிதிரட்டினான்.

புரட்சி கவி மன்னன் "ருஸ்யப் புரட்சி" என்ற கவிதையைப் பாடினான். இப்பாட்டிலே பாரதி மொழிந்த கடைசி இரண்டு அடிகள் மட்டும் போதும், அவனை சாகாத சிரஞ்சீவிக் கவிஞனாக்க. பாரதியின் கவிதைகள் அனைத்துமே தீப்பிழம்பில் சாம்பலானாலும், இவ்விரு முத்துமணிகளும் காலம் காலமாக, யுக யுகாந்திரமாக வாழும். "ருஸ்யப் புரட்சி"ப் பாட்டிலே அவன் காட்டிய தீர்க்கதரிசனம் இதோ:

"கலி வீழ்ந்தான்
கிருத யுகம்
எழுக மாதோ"

இரண்டே இரண்டு வரிகள். சாதாரண காவிய நயங்களுடைய இவ்வரிகள் சாகாவரம் பெற்றதெங்கனம்? இந்தியாவின் வாழ்வையும், உலகின் முன்னேற்றத்தையும் மகத்தான கவிதைகளாக்கிய புதுமைக் கவி பெருமானின் ஆயிரக்கணக்கான கவிதைகளுள் இவ்விரு வரிகளுக்கு மாத்திரம் தனிச் சிறப்பு எப்படி வந்தது?

இந்திய சமுத்திரம் மிகப் பெரியது, பயங்கரமானது, சரித்திரப் பிரசித்திமிக்கது – ஒரே வார்த்தையில் உணர்வுக் களஞ்சியம். ஆனால், அழகைத் தோற்றுவித்த கடலோடி தன் உயிரைத் தியாகித்து ஆழ்கடலோடுகிறான், கவர்ச்சியற்ற சிப்பிகளை அள்ளி வந்து அழகு முத்துகளைத் தேர்கிறான். ஆழ்கடலுக்குள் சென்று அவன் ஏந்தி வந்த சுந்தர முத்துக்கள் அவை.

இவ்வரிகள் பாரதப் புலவனின் கவிதைக் கடலிலே தேர்வான முத்துக்கள்.

புரட்சிப் பாவலனின் உலக ஞானத்தை, எதிர்கால மனித வளர்ச்சியின் வெற்றிப் பாதையை நிர்ணயிக்கும் தீர்க்க தரிசனத்தை முத்துமணிகளான இவ்வரிகள் மெய்ப்பிக்கின்றன. புல்லாண்டுகள் கடந்து, வீரக் கியூபா மேற்கிலே வஜ்ர மலையாக உறுதிகள் பெறுவதையும், கிழக்குக் கோடியிலே அஞ்சாநெஞ்சம் படைத்த வீர மறவர்களைக் கொண்ட கொரியா வெற்றி நடைபோட்டு பொருள் வளம்மிக்க புதுமைச் சமுதாயத்தை தோற்றுவிப்பதையும் கவிநாயகன் பாரதி முன்னோக்கோடு உலகுக்குக் கூறினான். ருஸ்ய மக்கள் தோற்றிய அக்டோபர் புரட்சியின் ஆதர்ஸம் உலகெங்கும் பேரொளி பரப்பி, புதுச்சுடர் படர்த்தி பொன்யுகத்தின் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டதாக மணிக்குரல் கிளப்பினான் புதுமைக் கவிஞன். எல்லாப் புரட்சிகளுக்கும் நடுநாயகம் ருஸ்யப் புரட்சி – அது யுகப் புரட்சி.

சாதாரண வாசகர்களுக்கு இவ்வரிகளின் மகத்துவம் இன்னும் புரியாதிருக்கலாம். இவை வெறும் சொல்லடுக்கு, கல்லடுக்கு

என்று சிலர் கருதலாம்.

சாகா வரம்பெற்ற கருத்துக்களை வலியுறுத்திய இவ்வரிகளில் இன்னும் சற்று மூழ்குவோம்.

உலகில் பல புரட்சிகள் நடந்துள்ளன. இவை பல காலங்களில் பல நாடுகளில் நடைபெற்றவை. ஆனால், இவைகளுக்கெல்லாம் மேலான, மகத்துவமிக்க, மகோன்னத புரட்சியாகத் திகழ்ந்தது அக்டோபர் புரட்சி. வரலாறு கண்ட மற்றைய புரட்சிகளுக்கு மாறாக, அக்டோபர் புரட்சி வர்க்க அரசை வீழ்த்தி, வர்க்க பேதமற்ற நவ யுகப் புதுமைச் சமுதாயதிற்கு அடிக்கல் நாட்டியது.

அக்டோபர் புரட்சிக்கு முன்னால் நடைபெற்ற புரட்சிகள் அனைத்தும், சமுதாயத்தின் ஒரு வர்க்க அரசை, பிறிதொரு வர்க்கத்தின் அரசாக மாற்றுவதிலேயே முடிவுற்றன.

உதாரணமாக, பிரெஞ்சுப் புரட்சி பழைய சமுதாயத்தில் பெரும் பூகம்பமென வெடித்தது. இப் புரட்சியின் விளைவு என்ன? பிரபுத்துவ சமுதாயம் ஒழிக்கப்பட்டது உண்மை. என்றாலும், வர்க்க பேதமற்ற சமுதாயம் அதன் ஸ்தானத்தில் உருவாகவில்லை. மாறாக, முதலாளித்துவ – பூர்சுவா வர்க்க ஆட்சி உருவாயிற்று.

மனிதனை மனிதன் சுரண்டி வாழும் கொடுமைமிகு சமுதாயத்தை, பெரும்பான்மை மனிதக் கூட்டத்தை மிகமிக சிறுபான்மை சோம்பேறிக் கூட்டம் அடக்கி ஆளும் அநியாய, அக்கிரம சமுதாயத்தை முற்றாக ஒழித்துக்கட்டிய ஒரே புரட்சி – உலக வளர்ச்சியின் திசை மார்க்கத்தை நிர்ணயித்த புரட்சி, சோசலிச அக்டோபர் புரட்சியாகும்.

அக்டோபர் புரட்சியின் பூரண முக்கியத்துவத்தை உணர, வரலாற்றுக் காலத்தை நாம் கடந்து செல்ல வேண்டும். மனித வரலாற்றின் ஆரம்ப நாகரீக வாழ்வின், பாரதியின் இந்தியா, சீனா, எகிப்து, பெபிலோனியா ஆகியவற்றின் பென்னம்பெரிய, தொல்லுலகின் கீர்த்திமிக்க வரலாறுகளையும் தாண்டிச் செல்ல வேண்டும். மனித சமுதாயத்தை நோக்கும் நாம், விஞ்ஞானரீதியில் அவ்வரலாற்றினை அணுக வேண்டும். மனித சமுதாயம், பண்டைய விலங்குகளின் பரிமாண வளர்ச்சியின் தோற்றுவாயாகும்.

மனித சமுதாயத்தின் முதல்கட்டம், சுரண்டலற்ற, அடக்குமுறையற்ற, வர்க்க பேதமற்ற, சமத்துவக் கோட்பாட்டை ஏந்திப் பிடித்த அற்புத சமுதாயமாகத் திகழ்ந்தது.

அன்றுமுதல், மானிடர்கள் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும், திட்டமிட்டாலும் திட்டமிடாவிட்டாலும், சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டிருந்தது. அடிமைச் சமுதாயம் அழித்து பிரபுத்துவ சமுதாயம் உருவாகியது. பிரபுத்துவ சமுதாயம் நீக்கி, முதலாளித்துவ சமுதாயம் வளர்ந்தது. எல்லாமே பெரும்பான்மை மக்களை அடக்கி, ஒடுக்கி ஆண்ட சமுதாய வர்க்கங்களின் சமுதாய முறைகள்.

மானிட சரித்திரத்திலேயே அக்டோபர் புரட்சி மற்றுமொரு யுக மாற்றத்தை உருவாக்கியது. முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டி சோசலிசத்தை ஸ்தாபித்தது. வர்க்க பேதமுள்ள சமுதாயத்தை முற்றாக நீக்கி, வர்க்க பேதமற்ற சமுதாயத்திற்கு அஸ்திவாரமிட்டது.

1917 அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவம் இவைதான். இப்புரட்சியின் உலக முக்கியத்துவத்தை உணர்ந்து, தனது தீர்க்கதிருஸ்டியில் கவி பொழிந்த பாரதி, இவை மூலம் அமரத்துவம் பெற்றான்.

(தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் எழுதிய இக்கட்டுரை பெரும்பாலும் பலராலும் அறியப்படாத ஒன்றாகும். அதற்குக் காரணம், புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான ‘தொழிலாளி’யின் 1963 நவம்பர் 16 மற்றும் 23 திகதிய இதழ்களில் வெளியான இக்கட்டுரையில் தோழர் கார்த்திகேசனின் பெயர் “மாணிக்கவாசகர் - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி உறுப்பினர்” என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் பெயர் மாற்றத்துக்குக் காரணம், அன்றைய காலகட்டத்தில் அரச ஊழியர்கள் அரசியலில் ஈடுபடுவதற்குத் தடை இருந்தது. எனவே ஆசிரியர் என்ற அரச தொழிலைச் செய்துவந்த தோழர் கார்த்திகேசன் “மாணிக்கவாசகர்” என்ற மாறு பெயரிலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்தார். இந்த விடயம் இன்றும் உயிர்வாழும் கட்சியின் மூத்த தோழர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகும்.

இந்தக் கட்டுரையை எழுதியவர் சம்பந்தமாக ‘தொழிலாளி’ பத்திரிகை கொடுத்த பின்வரும் அறிமுகம் மூலம் தோழர் கார்த்திகேசன் அவர்களுக்கு கட்சியில் இருந்த முக்கியத்துவத்தையும் செல்வாக்கையும் புரிந்துகொள்ள முடியும். அந்த அறிமுகக் குறிப்பு இதுதான்:

**“ஈழத்திருநாட்டு முற்போக்குவாதிகளின், குறிப்பாக கம்யூனிஸ்ட்டுகளின் அன்புக்கும், இதயபூர்வமான நேசத்துக்கும் உரித்தானவர் தோழர் மாணிக்கவாசகர்.**

**தியாகம் செறிந்த அவரது வாழ்வு, இலங்கையிலுள்ள சகல கட்சித் தோழர்களுக்கும் ஒரு முன்வுதாரணமாகும்.**

**பெரிய குடும்பப் பாரத்தை ஏந்தியும், சிறிதேனும் கட்சி ஊழியத்தை மறவாது, இரவு பகல் நாளெல்லாம் கட்சியின் வளர்ச்சிக்குத் தன் பேச்சையும், மூச்சையும், உணர்வையும், உடலையும் புன்முறுவல் பூத்த முகத்துடன் அர்ப்பணிக்கும் தங்கம் நிகர் தோழர் இவர்.**

**ஆங்கில மொழியில் மேதாவிலாசம் பெற்றவர் - ஆங்கில மொழிக் கவிஞராகத் திகழ்பவர். மார்க்சிச – லெனினிச தத்துவத்தில் எஃகு போன்ற உறுதி மிக்கவர்.**

**திறமையும், திறனாய்வும், தேர்ச்சியும் மிக்க இத்தோழர், புகழ்நாடாதவர், சொல்வதைச் செய்பவர், தற்புகழ்ச்சியைச் சிறுமையெனக் கருதுபவர், பிள்ளைக் குணமுடையவர், போராட்டத்திற்கு அஞ்சாதவர்.”**

---

மக்கள் இன்னும் விழித்து எழாத நிலையில் நாம் தாக்குதலில் செல்ல முயன்றால் அது சாகசவாதம் (adventurism), மக்கள் விரும்பாத ஒரு விசயத்தை செய்யும்படி நாம் அவர்களை வழிநடத்துவதில் பிடிவாதமாய் நின்றால் நாம் நிச்சயமாக தோல்வி அடைவோம். மக்கள் முன்னேற்றத்தைக் கோரும் போது நாம் முனனேறாவிட்டால் அது வலதுசாரி சந்தர்ப்பவாதம் ஆகும்.

**–மா சே துங்**

# புரட்சிகரப் பெண்மணி கோட்டேஸ்வரம்மா



புரட்சிகரக் கம்யூனிஸ்ட் போராளியின் வாழ்க்கைத் துணைவராகி, கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, தலைமறைவு வாழ்க்கையின் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் முகங்கொடுத்து, பிடிவாதம் மிக்க கணவரிடமிருந்து தனிமைப்பட்டு, மகனையும் மகளையும் தன் காலத்திலேயே பறிகொடுத்து, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து பெற்ற இனிப்பும் கசப்பும் கலந்த அனுபவங்களைக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் மூதாட்டி கோட்டேஸ்வரம்மா தமது நூறாவது வயதில் காலமாகிவிட்டார். ஒரு காலம் விடைபெற்றுக்கொண்டது.

பேரனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை கோட்டேஸ்வரம்மாவுடையது. நான்கு அல்லது ஐந்து வயதாகியிருந்தபோதே, குழந்தைத் திருமணம் செய்யப்பட்டு, பருவம் எய்துவதற்கு முன்பே கணவனை இழந்தவர். ஆந்திராவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை நிறுவியவர்களில் ஒருவரும், தெலுங்கானா போராட்ட வீரர்களில் ஒருவருமான சந்திர ராஜேஸ்வர ராவின் முன்முயற்சியின்பேரில், அவரது இளம் தோழரான சீதாராமய்யாவுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

அந்தக் காலத்தில் அது ஒரு புரட்சிகரத் திருமணம். விதவை மறுமணம் மட்டுமல்ல, சாதி மறுப்புத் திருமணமும்கூட. நிலப்பிரபுத்துவ, சாதிய நடைமுறைகளை எதிர்க்கவும், மறுக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களைத் தமக்குச் சரிசமமாகக் கருதவும் சீதாராமய்யாவிடமிருந்து கற்றுக்கொண்ட கோட்டேஸ்வரம்மா, அந்த விழுமியங்களைத் தமது வாழ்க்கையின் இறுதிவரை கடைப்பிடித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்–லெனினிஸ்ட்) பல்வேறு மாநிலங்களில் ஒடுக்குமுறைகளாலும் உள் முரண்பாடுகளாலும் பல்வேறு குழுக்களாக உடையத் தொடங்கிய சூழல். ஆயுதமேந்திய போராட்டத்தை முழுமையாகக் கைவிடாத, அதேவேளை சட்டரீதியான, வெளிப்படையான வெகுமக்கள் அமைப்புகளைக் கட்டுவதன் மூலம், புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுத்து முன்னேற்றுவதற்காக மிகக் குறுகிய காலத்தில் லட்சக்கணக்கான பழங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோரை மட்டுமின்றி நூற்றுக்கணக்கான அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரைத் திரட்ட 'மக்கள் யுத்தம்' கட்சியை நிறுவினார் கே.எஸ். என்று அழைக்கப்பட்ட கொண்டபள்ளி சீதாராமய்யா. அவருடைய வாழ்க்கைத் துணைவராகவும் போராட்டத் தோழராகவும் மட்டுமின்றி, தம்மளவிலேயே தனிச் சிறப்பான பெண்ணியப் போராளியாக, இலக்கியவாதியாக, பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளை வலியுறுத்தியவராக வாழ்ந்தவர் கோட்டேஸ்வரம்மா.

*எஸ்.வி.ராஜதுரை*

சீதாராமய்யாவைப் போலவே தமக்கு வந்த குடும்பச் சொத்தையும் கட்சிக்குக் கொடுத்தார். கலை நிகழ்ச்சிகள் நடத்துவது, கிராமங்களில் பெண்களுக்குக் கழிப்பறைகள் கட்டித் தருவது, ஜாக்கெட் அணியும்படி பெண்களை ஊக்குவிப்பது, கிருஷ்ணா வாய்க்காலில் தூர் வாருவது, திருமணமாகாத கம்யூனிஸ்ட் பெண்கள் ஒன்றாக வாழ கம்யூன்கள் அமைப்பது என்று அவர் தொடாத பணிகள் இல்லை. சிறை வாழ்க்கையின் கொடுமைகளைத் துச்சமாகக் கருதியவர்.

ஆயினும், அர்ப்பணிப்பு மிக்க கம்யூனிஸ்ட் இயக்கத்திலும்கூட 'ஆணாதிக்கம்' தொடர்ந்து பல வடிவங்களில் இருந்துவந்ததைத் துணிச்சலோடு எதிர்த்து நின்றார் கோட்டேஸ்வரம்மா. கம்யூனிஸ்ட் இயக்கத்திலுள்ள அறிவுஜீவிகள் அகம்பாவத்தோடு நடந்துகொள்வதையும் அவர் சாடியிருக்கிறார். தெலுங்கானா போராட்டக் காலத்திலிருந்து 'மக்கள் யுத்தம்' கட்சி நடத்திய போராட்டக் காலம் வரை சீதாராமய்யா தலைமறைவாகவும் சிறை வாழ்க்கையிலும் இருந்தபோது, அவர்களது குழந்தைகளை வளர்க்கும் குடும்பச் சுமையும் கோட்டேஸ்வரம்மா மீதே விழுந்தன. போலீஸாரால் கொல்லப்பட்ட அவரது மகன் 'சந்தூ'வின் உடலைக்கூட அவரால் பார்க்க முடியவில்லை. ஒரே மகளான கருணா மன அழுத்தத்தின் காரணமாகத் தற்கொலை செய்துகொண்டார். கருணாவுக்கு முன்பே அவரது கணவர் திடீரென்று இறந்துபோனார்.

தனிப்பட்ட காரணங்களால் சீதாராமய்யாவிடமிருந்து பிரிந்து,, குடும்ப உறுப்பினர்கள் எவருடைய தயவும் இல்லாமல், பல ஆண்டுகள்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# மாத்தளை, மன்னார் மனிதப் புதைகுழிகள் குறித்து அவற்றின் ஆய்வாளர் பேராசிரியர் ஆர். சோமதேவ அவர்களின் கருத்து



**மாத்தளையில் சில வருடங்களுக்கு முன்னர் இனம் தெரியாதவர்களின் மனிதப் புதைகுழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல மன்னாரிலும் தற்பொழுது இனம் தெரியாதவர்களின் மனிதப் புதைகுழியொன்று கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொளன்ளப்பட்டு வருகின்றன.**

**இந்த இரு புதைகுழிகளினதும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொல்பொருளியல் மற்றும் புராதன வரலாற்றுப் பேராசிரியர் ஆர்.சோமதேவ அவர்கள் 'சிலோன் ருடே' க்கு மன்னாரில் வைத்து வழங்கிய செவ்வியின் முக்கியமான பகுதிகளை கீழே தொகுத்துத் தந்துள்ளோம்.**

*-வானவில்*

**மாத்தளை மனிதப் புதைகுழி குறித்து அவர் தெரிவித்த கருத்துக்கள்:**

அங்கு 154 மனித எலும்புக்கூடுகள் இருந்தன. அவற்றில் அநேகமானவை பரிசோதிக்கப்பட்டன. அவை இளம் ஆட்களுடையவை என்பதை நான் கண்டறிந்தேன். குற்றச் செயல் இடம் பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகள், விடயங்கள் மற்றும் தொடர்புபட்ட திகதி என்பனவற்றை நான் தொகுத்திருந்தேன். அந்தத் தருணத்தில் அரசியல் ரீதியான தலையீடு இருந்தது. இறுதியாக அவர்கள் நீதிபதியை மாற்றியிருந்தனர். அந்த வழக்கில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியை மாற்றியிருந்தனர்.

மாத்தளையில் விசாரணை செய்யும்படி எனக்கு நீதிபதி அழைப்பு விடுத்திருந்தார். சி.ஐ.டி. ஏற்கெனவே தோண்டும் பணியை பொறுப்பேற்றிருந்தது. ஆனால் எனது குழுவினருக்கு அந்த நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட திகதிகளைத் தீர்மானிப்பதும் எலும்புக்கூடுகள் தொடர்பாக ஆவணப்படுத்துவதுமே பொறுப்பாகக் காணப்பட்டது. தனிப்பட்டவர்களை வெவ்வேறாகக் கொண்டு வருவதற்கு நாங்கள் முயற்சித்திருந்தோம். அந்தப் புதைகுழி உத்தியோகபூர்வமானதா அல்லது இல்லையா என்பது குறித்து உறுதிப்படுத்துவதற்கான நிகழ்வுகளை நாங்கள் மீளக் கட்டமைத்தோம்.

எலும்புக்கூடுகள் சில ஒன்றாகக் குவிக்கப்பட்டு அல்லது கட்டப்பட்டு இருந்தன. ஒரு எலும்புக்கூட்டில் காலில் உலோகமொன்று காணப்பட்டது. சிலவற்றுக்கு இடையண்ண எலும்புகள் அகற்றப்பட்டிருந்தன.

அவை இளம் ஆண் மற்றும் பெண்களின் எலும்புக்கூடுகள். என்னிடம் அந்த அறிக்கையின் பிரதி உள்ளது. மாத்தளை நீதிபதியும் அதனை வைத்திருக்கக்கூடும். பொது ஆவணமாக எவரும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மன்னார் புதைகுழி பற்றி அவர் கூறியதாவது:**

2018 மே 28 நாங்கள் இங்கு வந்தோம். இப்போதும் இங்கு தொடர்ந்து தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

2018 ஆகஸ்ட் 6 வரை 72 எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆறு, ஏழு பெண்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அதே எண்ணிக்கையில் 12 வயதுக்குக் குறைவான பிள்ளைகளையும் அடையாளம் கண்டுள்ளோம். இது ஒரு தனித்துவமான நிலைமையாகும். இந்த உத்தியோகப்பற்றற்ற புதைகுழிக்கு அருகாமையில் உத்தியோகபூர்வமான மயானமொன்று இருக்கின்றது.

புதைக்கும் போது உள்ளே வைக்கும் திசை தீர்மானிப்பதற்கு முக்கியமானதாகும். அதாவது அது முறைப்படியாக இடம் பெற்றதா அல்லது இல்லையா என்பது அதில் முக்கியமானதாக இருக்கின்றது.

அங்கு சவப்பெட்டிகள் இருக்கவில்லை. அங்கு புதைக்கப்பட்டவர்கள் யாவரும் இந்துக்களென நம்புகின்றோம். நேராக வைக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு உடலும் வெவ்வேறாக தனித்தனியே வைக்கப்பட்டிருந்தன. எலும்புக்கூடுகள் சிலவற்றுக்கு அருகே கலை வேலைப்பாடுகளுடன் கூடிய பொருட்கள் காணப்பட்டன. இடது பக்கத்தில் பானைகளும் கரித்துண்டுகளும் காணப்பட்டன. அது இந்துக் கிரியைகளின் அங்கமாக இருக்கின்றது. ஆனால் முறைசாராப் புதைகுழிப் பகுதியில் எலும்புக்கூடுகள் குழப்பமாகக் காணப்பட்டன. புதைக்கும் போது திசை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. வெறுமனே உடல்கள் புதைக்கப்பட்டவை போன்று தென்படுகின்றன.

எலும்புகள் முறிந்திருப்பதைக் கண்டுள்ளோம். ஆனால் அவை பிரேத பரிசோதனையின் போது ஏற்பட்டவையா அல்லது அதற்கு முன்பாக ஏற்பட்டவையா என்பது தொடர்பான முடிவை எம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை. இரசாயன தடயவியல் ஆய்வின் ஊடாகவே சட்ட மருத்துவ அதிகாரிகளினால் அதனைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதனை விஞ்ஞானபூர்வமாக நான் பார்க்க வேண்டியுள்ளது.

(மாத்தளை மனிதப் புதைகுழி ஆர்.பிரேமதாச ஆட்சிக்காலத்தில் 1988 – 89 காலப்பகுதியில் ஜே.வி.பி. மேற்கொண்ட இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியின் போது அரச படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட சுமார் 60,000 சிங்கள இளைஞர்கள், யுவதிகளில் ஒரு பகுதியினருடையதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

மன்னார் புதைகுழியைப் பொறுத்தவரை 30 வருட உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட அரச மற்றும் புலிகள் தரப்பில், எந்தத் தரப்பின் செயற்பாடாக இருக்கலாம் என்பது இன்னும் தெளிவாகவில்லை)

# நோர்வேயும் சவூதி அரேபியாவும் சிங்களா – முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் பின்னால் இருக்கின்றன!

*பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு!!*

“பொதுபல சேனாவை அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க நோர்வே ஆதரிக்கின்றது. அதுபோல இலங்கையில் செயல்படும் வகாபி (Wahabi) இயக்கத்தை சவூதி அரேபியா ஆதரிக்கின்றது. எனவே தமிழ் – முஸ்லிம் மக்கள் தேசிய ரீதியான இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயல்பட முன்வர வேண்டும்”. இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. கல்முனையில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே விதாரண இவ்வாறு கூறியிருக்கிறார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஐ.தே.க. தலைமையிலான தற்போதைய அரசாங்கம் பின்பற்றும் வெளிநாட்டு ஆதிக்கத்திலான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டின் தேசிய சுதந்திரமும், சுயாதிபத்தியமும் பாதிக்கப்பட்டு, நாடு அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளினதும் அரைக் காலனி நாடாக மாற்றப்பட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் வறுமை, போசாக்கின்மை என்பன தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என அனைவரையும் பாதித்துள்ளது. எனவே நாம் இலங்கையர் என்ற ஒரே தேசமாக ஐக்கியப்பட்டு நிற்க வேண்டும்.

திரிகோணமலையை இராணுவத்தளம் அமைப்பதற்காக அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எமது பாரம்பரியமான அணிசேராக் கொள்கை கைவிடப்பட்டுள்ளதுடன், அமெரிக்கா சங்கிலித் தொடராக அமைத்து வரும் இராணுவத் தளங்களின் ஒரு பகுதியாக இந்து சமுத்திரத்தில் எமது செலவில் அவர்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

பொருளாதாரம் எமது நாட்டினதும், மக்களினதும் தேவைக்கேற்ப நடைபெறவில்லை. பதிலாக அந்நிய பல்தேசியக் கொம்பனிகளினதும் கோப்பிரேட் நிறுவனங்களினதும் சந்தைப்



பொருளாதார சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளினால் எமது அரச வங்கிகளின் செலவில் பொருளாதாரம் கட்டுப்படுத்தப்படுவதுடன், கொள்ளையும் அடிக்கப்படுகிறது.

## இத்ரீஸ்

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பெரும்பாலான தலைவர்கள் வலதுசாரி அரசியல் தலைவர்களாக இருப்பதுடன், அவர்களது நோக்கமெல்லாம் உள்நாட்டு, வெளிநாட்டு பணக்காரர்களைப் பாதுகாப்பதாகவே இருக்கின்றது. அவர்கள் அமெரிக்காவுக்குச் சார்பானவர்களாக இருப்பதுடன், நவ தாராளவாத நிகழ்ச்சி நிரலையும் கொண்டிருக்கிறார்கள்.

அத்துடன், அமெரிக்காவின் ஆசீர்வாதம் பெற்றுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவற்றுடன் இலங்கை அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தங்களில் உள்ள நிபந்தனைகளின் காரணமாக பாரதூரமான பொருளாதார நெருக்கடி உருவாகியுள்ளதுடன், தேசிய கொள்கையிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, வரிக் கொள்கை மக்களைக் கடனாளிகளாக ஆக்கி, வாழ்க்கைச் செலவை அதிகரித்துள்ள அதேவேளை, ஒரு சிறு தொகையினரான உள்நாட்டு, வெளிநாட்டு பணக்காரர்களை ஆடம்பர வாழ்வில் திளைக்க வைத்துள்ளது. இந்தவிதமான நடவடிக்கைகள் மூலம் ஏகாதிபத்தியங்கள் நாடுகளைத் தங்குதடையின்றிச் சுரண்டுகின்றன.”

இவ்வாறு விதாரண தமது உரையில் குறிப்பிட்டார்.

---

**12ம் பக்கத்தொடர்ச்சி....**

சொந்தக் காலில் நின்று வாழ்ந்துவந்த போதிலும், புரட்சியையே தமது உயிர் மூச்சாகக்கொண்டிருந்த தமது கணவர் மீதான மதிப்பை கோட்டேஸ்வரம்மா ஒருபோதும் கைவிடவில்லை. எந்தக் கட்சிக்காகத் தமது வாழ்க்கையின் கணிசமான பகுதியை அர்ப்பணித்தாரோ, அந்தக் கட்சியால் வெளியேற்றப்பட்ட சீதாராமய்யா, உடலும் மனமும் நொந்திருந்த காலத்தில் தாய்மை உணர்வுடன் அவருக்கு உணவு சமைத்து அனுப்பினார். அதேசமயம், முழு சமரசமும் செய்து கொள்ளவில்லை. சீதாராமய்யா இறந்தபோது கட்சிக்காரர்கள் ஒருவர்கூடத் துக்கம் விசாரிக்க வராததைத் தன் வாழ்வின் பெரும் வேதனையாகக் கருதினார் கோட்டேஸ்வரம்மா.

கோட்டேஸ்வரம்மாவின் அசாதாரணமான வாழ்க்கை வரலாற்றை இங்கு அவர் எழுப்பிய தார்மிகக் கேள்விகளுடன் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள், கௌரி கிருபானந்தனால் சிறப்பாகத் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள கோட்டேஸ்வரம்மாவின் தன் வரலாற்று நூலான ‘ஆளற்ற பாலம்’ (காலச்சுவடு வெளியீடு) கட்டாயம் படிக்க வேண்டும். உண்மை எப்படி இலக்கியமாக மிளிரும் என்பதையும் சொல்லும் நூல் அது!

**நன்றி: த இந்து, 20.09.2018**

---

புரட்சி யுத்தம் என்பது பொதுமக்களின் யுத்தம், பொது மக்களைத் தட்டியெழுப்பி, அவர்களைச் சார்ந்திருந்தால் தான் இந்த யுத்தத்தை நடத்த முடியும்.

**–மா சே துங்**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

மாற்றுக் கருத்துச் சக்திகளை அழித்து, தனிப்பெரும் பாசிச – மாஃபியா சக்தியாக வளர்ந்து, எவராலும் வெற்றி கொள்ளப்பட முடியாதவர்கள் எனக் கணிக்கப்பட்ட புலிகளை மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் நிர்மூலமாக்கியது. புலிகளின் பாசிசத் தலைவன் பிரபாகரனைக் காப்பாற்ற ஏகாதிபத்திய சக்திகள் எடுத்த முயற்சியையும் கூட மகிந்த அரசு அனுமதிக்கவில்லை. இது மகிந்த அரசு மீது ஏகாதிபத்திய சக்திகளை சீற்றமடைய வைத்த முக்கியமான விடயமாகும்.

அடுத்ததாக, போர் முடிவுற்றதின் பின்னர் நாட்டைச் சுபீட்சப் பாதையில் கட்டியெழுப்புவதற்கு மகிந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஏகாதிபத்திய சக்திகள் பல்வேறு வழிகளில் முட்டுக்கட்டைகள் போட்டு வந்தன. ஏனெனில் போர் முடிவுற்றுவிட்டதால் நாடு துரிதகதியில் வளர்ச்சி அடையும் என அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அப்படி வளர்ச்சி அடைந்தால் சிறீ.சு.கட்சி தலைமையிலான அரசை அடுத்த 50 வருடங்களுக்கு அசைக்க முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனாலேயே இந்த முட்டுக்கட்டைகளைப் போட்டன.

ஆனால் அவர்களது இந்த நடவடிக்கை பயனளிப்பதற்குப் பதிலாக எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியது. இலங்கை தனது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, எப்பொழுதுமே ஆபத்தான வேளைகளில் உதவிக்கு ஓடிவந்த சீனாவின் உதவியை நாடியது. இது ஏகாதிபத்திய சக்திகளால்சகிக்க முடியாத இன்னொரு முக்கியமான விடயமாகும்.

புலிகளை அழித்தது, சீனாவுடன் நெருங்கிச் சென்றது, இரண்டுமே இலங்கையில் மகிந்த அரசை வீழ்த்துவதற்கு ஏகாதிபத்திய சக்திகள் வியூகம் வகுப்பதற்கு முக்கியமான காரணிகளாக அமைந்தன. அதன் விளைவே 2015 ஜனவரி 8 ஆட்சி மாற்றம்.

இதற்கான புறச்சூழலை முதலில் உருவாக்கினார்கள். ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவைப் பயன்படுத்தி மகிந்த அரசு மீது கடுமையான போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி நெருக்கடி கொடுத்தார்கள். உள்நாட்டைப் பொறுத்தவரையில் குடும்ப ஆட்சி நடைபெறுகிறது, ஊழல் மோசடிகள் தலைவிரித்தாடுகின்றன, ஊடக சுதந்திரம் நசுக்கப்படுகின்றது, வடக்கு கிழக்கில் இராணுவ அட்சி நடைபெறுகின்றது, நாடு சிங்களமயமாக்கப்படுகின்றது, போன்ற பல பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

இருப்பினும், வழமையான தமது நேச சக்தியான ஐ.தே.க. மூலம் மகிந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்று கண்ட ஏகாதிபத்திய சக்திகள், இம்முறை புதிய யுக்தியொன்றைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்தனர். இதற்காக அவர்கள் மகிந்த ராஜபக்ச மீது தனிப்பட்ட காழ்ப்புணர்வு கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கவை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அவர் மூலம் சுதந்திரக் கட்சியில் பிளவை ஏற்படுத்தி, அதன் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவைப் பிரித்தெடுத்து அவரை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக்கினர்.

அவருக்கு ஆதரவாக வழமையான சிங்கள – தமிழ் வலதுசாரிக் கட்சிகளான ஐ.தே.கவையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் ஆதரவாகச் செயல்பட வைத்தனர். அத்துடன் மகிந்த அரசில் பதவிக்காக ஒட்டிக் கொண்டிருந்த சில முஸ்லிம் - மலையகக் கட்சிகளையும் இணைய வைத்தனர். இவர்கள் தவிர, வழமைக்கு மாறான ஒரு ஐந்தாவது அணியாக (Fifth Column) இடதுசாரி இயக்கங்களில் இருந்த சில ஓடுகாலிகளையும், 'மனித உரிமை' அமைப்புகளையும் முக்கிய செயற்பாட்டாளர்கள் ஆக்கினர். இந்த முயற்சிகளின் மூலம் நாட்டில் மகிந்த தலைமையில் இருந்த ஏகாதிபத்திய விரோத, தேசபக்த அரசுக்கு முடிவு கட்டினர்.

ஆனால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்பது போல, 'நல்லாட்சி'யின் இலட்சணத்தை கடந்த மூன்று வருட காலத்தில் நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்துவிட்டனர். அந்த உணர்வின் வெளிப்பாட்டை கடந்த பெப்ருவரி 10இல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் கூட்டு எதிரணியை அமோக வெற்றிபெற வைத்ததின் மூலம் காட்டியும் விட்டனர்.

'நல்லாட்சி' ஆட்சியாளர்களால் மக்களுக்கு தேர்தல் காலங்களில் வழங்கிய எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியவில்லை என்பதுடன். ரூபாயின் மோசமான மதிப்பு வீழ்ச்சியைத் தடுக்கத் தவறியதின் மூலம் மக்களை வாழ முடியாத நிலைமைக்கும் தள்ளி விட்டுள்ளனர். இதனால் 'நல்லாட்சி'யில் ஜனாதிபதி – பிரதமர் பதவிகளை வகிப்பவர்களின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் தினசரி அடிதடியும் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது.

இதன் காரணமாக இந்த அரசு எந்த நேரமும் கவிழலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. ஆட்சியின் வீழ்ச்சி என்பது ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் என்பனவற்றின் மூலமும் நடைபெறலாம் அல்லது அதற்கு முதல் வேறு வழிகளிலும் நடைபெறலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையை லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஏடான 'எக்கோனமிஸ்ற்' (Economist) சஞ்சிகையும் வெளிப்படுத்தியுள்ளது. இதே சஞ்சிகைதான் 2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக வெளியிட்ட சிறப்புக் கட்டுரை ஒன்றுக்கு "மகிந்த ஆட்சி முடிவுக்கு வருகிறது?" என்று தலைப்பிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நாட்டு மக்கள் ஆட்சி மாற்றமொன்றை விரும்பினாலும், இந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வந்த ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களது உள்நாட்டு அடிவருடிகளும் அதற்கு இலேசில் இடம் கொடுக்க விரும்பமாட்டார்கள். அவர்கள் சகல வழிகளிலும் நாட்டில் ஒரு ஏகாபத்திய விரோத, முற்போக்கு அரசு ஏற்படுவதைத் தடுக்கும் கடும் பிரயத்தனங்களில் ஈடுபடுவர். அற்கு ஒரு உதாரணம், சமீபத்தில் கொழும்பிலிருந்து 'டெயிலி மிரர்' (Daily Mirror) பத்திரிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், கடைந்தெடுத்த வலதுசாரியுமான எம்.ஏ.சுமந்திரன், அடுத்து வரும் தேர்தலிலும் 2015இல் ஏற்பட்ட அரசியல் கூட்டு தொடர வேண்டும் எனத் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

எனவே, மக்கள் விரோத சக்திகளைக் குறைத்து மதிப்பிடாமல், சகல ஏகாதிபத்திய விரோத, முற்போக்கு, ஜனநாயக சக்திகளையும் ஒரு பரந்துபட்ட அணியில் திரட்டுவது முற்போக்கு சக்திகளின் வரலாற்றுக் கடமையாகும். இந்தப் பணி இன்றைய ஆட்சியின் கீழ் பல இன்னல்களைச் சந்தித்து வரும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களினதும் கடமையாகும்.

"ஆட்சி மாற்றம்" என்ற சொல் அனைத்து மக்களினதும் தாரக மந்திரமாக ஒலிக்க வேண்டும்.

---

நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்தவரை, நாம் ஒரு நாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் நம்மைப் போரிடும்படி நிர்பந்தித்தால், நம்மால் இறுதிவரை போரிட முடியும். **–மா சே துங்**

# முதலாளித்துவத் தேசியவாதத்துக்கு உதாரணமாகத் திகழும் ஆங் சான் சூகீ!

மியன்மாரின் (முன்னைய பர்மா) “சமாதான தேவதை” என வர்ணிக்கப்பட்டவரும், மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரச் செயல்பாடுகளுக்கெதிராக பல ஆண்டுகள் போராடியதன் காரணமாக இருபது வருடங்களுக்கும் மேலாக இராணுவ அரசால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தவரும், அவரது அயராத போராட்டம் காரணமாக நோபல் பரிசு வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவருமான மியன்மார் தலைவி ஆங்சான் சூ கீ (Aung san suu kyi) தற்பொழுது உலக அரங்கில் மதிப்பிறக்கம் செய்யப்படவராகக் காட்சியளிக்கிறார்.

சூ கீயின் இந்த நிலைக்குக் காரணம், மியன்மாரில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்த ரொகிங்கியா முஸ்லிம் சமூக மக்களை இராணுவ அரசு கொடூரமான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி, அவர்களை நாட்டைவிட்டே விரட்டி இனச்சுத்திகரிப்புச் செய்தபோது, சூ கீ அதனைத் தடுத்து நிறுத்த முயற்சிக்காதது மட்டுமின்றி, குறைந்தபட்சம் கண்டன அறிக்கை கூட விடுக்கவில்லை.

சூ கீயின் இந்த நிலைப்பாடு உலக அரங்கில் முதலில் பெரும் அதிர்ச்சியையும், பின்னர் கண்டன அலைகளையும் தோற்றுவித்தது. அதேநேரத்தில், மியன்மார் இராணுவத்தின் எதேச்சாதிகாரத்துக்கு எதிராக ஜனநாயகத்தை நிலைநாட்டப் போராடிய சூ கீ, ஏன் ரொகிங்கிய முஸ்லிம் மக்களுக்கெதிரான இராணுவ ஒடுக்குமுறையை எதிர்க்கவில்லை என்ற கேள்வியையும் எழுப்பியது.

உண்மையில் இங்குதான் முதலாளித்துவ தேசியவாதிகளின் உண்மையான சொரூபத்தை விளங்கிக் கொள்ள முடியும். பெரும்பான்மை மியன்மார் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையை எதிர்த்த சூ கீ, மியன்மாரின் சிறுபான்மை முஸ்லிம் மக்கள் மீதான அதே இராணுவத்தின் ஒடுக்குமுறையை கைகட்டி வேடிக்கை பார்த்திருக்கிறார். இது எல்லா முதலாளித்துவ தேசியவாதிகளுக்கும் பொருந்தும்.

உதாரணமாக, இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடுவதாகக் கூறி தமிழ் மக்கள் சார்பில் ஆயுதம் தூக்கிய புலிகள், அதே நேரத்தில் தமிழ் மக்களையும் விடச் சிறிய



இனமான முஸ்லிம்கள் மீது படுகொலைகளை நிகழ்த்தி, வடக்கிலிருந்து அவர்களை விரட்டியடித்து இனச் சுத்திகரிப்பும் செய்தனர். உண்மையில் இது சூ கீயின் ரொகிங்கிய முஸ்லிம்கள் பற்றிய மௌன நிலைப்பாட்டை விட மிகவும் மோசமானது.

**வேலாயுதம்**

இதிலிருந்து தேசியவாதம் என்பது பொத்தாம் பொதுவாக முற்போக்கானதாக இருப்பதில்லை என்ற உண்மை நிரூபணமாகிறது. ஓவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டங்களும் அரசியல் ரீதியான தன்மைகளைக் கொண்டவை. உதாரணமாக, சீன மற்றும் கொரிய மக்களின் யப்பானிய ஆக்கிரமிப்பாளருக்கெதிரான தேசியவாதம், பிரான்சு மற்றும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான வியட்நாமிய மக்களின் தேசியவாதம், தென் ஆபிரிக்க, ரொடீசிய, அங்கோலா, நமீபிய, மொசாம்பிக் மக்களின் வெள்ளை நிறவெறியர்களுக்கெதிரான தேசியவாதம், இஸ்ரேலிய சியோனிச ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான பாலஸ்தீன மக்களின் தேசியவாதம் என்பன முற்போக்கான தேசியவாதங்கள் ஆகும். அதனால்தான் அப்போராட்டங்களுக்கு உலக மக்களின் ஆதரவு கிடைத்ததுடன், அவற்றில் பல வெற்றியீட்டவும் முடிந்தது.

ஆனால் கொசவா மக்களின் மக்களின் தேசியப் போராட்டம், இலங்கைத் தமிழர்களின் தேசியப் போராட்டம் என்பவை பிற்போக்கானவை. இந்த மக்கள் மீது பேரினவாத தேசிய ஒடுக்குமுறை இருப்பது உண்மை என்றபோதிலும், இந்த மக்களின் தலைமைகள் பிற்போக்கானவை, ஏகாதிபத்திய சார்பானவை. தேசிய விடுதலைப் போராட்டத்தின் சாராம்சமே ஏகாதிபத்திய எதிர்ப்பாக இருக்கையில், இந்த இனங்களின் தலைமைகள் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருந்தே தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அதனால்தான், இலங்கைத் தமிழர்களின் போராட்டம் உட்பட இந்த வகையான போராட்டங்கள் வெற்றிபெற முடியாமல் அழிவுகளைச் சந்தித்து வருகின்றன.

இதன் காரணமாகவே, இலங்கை முற்போக்காளர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடத்திய புலிகளின் போராட்டத்தை ஒருபோதும் ஆதரிக்கவில்லை.

ரஸ்யாவில் லெனின் தலைமையில் 1917இல் நடந்த ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியே உலகில் முதன்முதலாக ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலையை நடைமுறைப்படுத்தி, தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கியது. லெனினின் மந்திரிசபையில் ரஸ்யாவின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான ஜோர்ஜியைச் சேர்ந்த ஸ்டாலின் தேசிய இன விவகாரங்களுக்கான அமைச்சராகத் திறம்படச் செயலாற்றினார். அவர் தனது அனுபவங்களைப் பல கட்டுரைகளில் வடித்துச் சென்றிருக்கிறார். அவற்றில் முக்கியமானது “மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சினையும்” என்ற அவரது பிரசித்தி பெற்ற நூலாகும்.

ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் பற்றிக் குறிப்பிடும் ஸ்டாலின், “கம்யூனிஸ்ட்டுகளான நாங்கள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கின்றோம். ஆனால் அதற்காக ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருந்து நடத்தப்படும் போராட்டங்களை நாம் ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம்” எனத் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார். இலங்கையிலுள்ள கம்யூனிஸ்ட்டுகளின் நிலைப்பாடும் அதுதான்.